காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

31—10—71

★

உள்ளே......

அவசிய, அவசரம்!
(தலையங்கம்)

பேரறிஞர் அண்ணா-
சில நினைவுகள்
(கட்டுரை)

வலிய கரங்கள்
எங்களுக்கும்
இருக்கின்றன!
(அப்போலோ)

குழந்தை!
(சிறுகதை)

சோழமாதேவி
(தொடர்கதை)

விலை 20 காசு



தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவையின் சார்பில்
டாக்டர் முத்தைய செட்டியார் கலைஞருக்கு பொன்னுடை போர்த்துகிறார்



குழந்தை?

— அவினுசி முருகேசன் —

எதிர்வீட்டுக் குழந்தைதான் எப்படி இருக்கிறது. பார்க்கப் பிய்த்துத் தின்றுவிடலாம்போல இருந்தது அவளுக்கு. அந்தக் குழந்தை கையில் ஏதோ விளையாட்டுப் பொருள்களைக் கொண்டுவந்து முன் 'கேட்'டின் அருகே நின்றுகொண்டு தாவித் தாவி விளையாடிய கோலம் அவளைக் கிறங்க வைத்தது. பூங்கொடிக்கு அந்த அனுபவம் புதியதல்ல; இந்த ஒரு வார காலமாகவே அப்படியொரு ஏக்கம், அந்தக் குழந்தையின் காரணமாக அவளுக்கு ஏற்பட்டிருந்தது......

'என்ன அழகாக இருக்கிறது குழந்தை? சுருண்ட முடியும், குறுகுறுவான கண்களும், துலக்கமான முகமும், ஆப்பிளை வெட்டி ஒட்ட வைத்தாற்போன்ற மொழுமொழு கன்னங்களும்......அம்மா... குழந்தையா அல்லது தேவதை வடிவில் வந்த ஓர் அழகுச் செல்வமா என்று பேதமே காண முடியவில்லையே...' அவள் சிந்தனை நெடுநேரம் வரை அந்தக் குழந்தையைச் சுற்றியே இருந்தது.

தெருவில் வாகனங்களும், கார்களும் கூட்டம்கூட்டமாகப் போனபோது பூங்கொடிக்கு நெஞ்சு 'பக்'கென்று அடித்துக் கொள்ளும். 'ஒருவேளை அந்தக் குழந்தை கீழே தெருவில் இறங்கி வந்து ஏதாவது பஸ்ஸில்......ஐயோ?!' நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது அவளுக்கு.

உள்ளே அம்மா தோசை வார்த்துக்கொண் டிருந்தாள். கண்ணுடியை முன் வைத்துப் பின்னலைப் பின்னிக்கொண்டே, அந்தக் குழந்தையையே இன்னும் பார்த்துக் கொண்டிருந்தாள் பூங்கொடி.

"ஏய் பூங்கொடி......என்ன அந்தக் குழந்தையையே அப்படிப் பார்க்கிறே...? திருஷ்டிப்பட்டுடப் போகுது........." என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தாள் அவள் தோழி ராணி.

"இல்லையடி ராணி...... அந்தக் குழந்தையைப் பார்த்தால் 'அப்படி'யிருக்கு......" என்று தன் கண்களை இறுக்கி மூடி தன் ஆதங்கத்தைக் காட்டினுள் பூங்கொடி.

"ஏய்...என்னடி புதுசா குழந்தை மீது மோகம் வந்துட்டுது...? உனக்கும் ஒரு கல்யாணம் ஆகி, அப்புறமா ஒரு குழந்தை பெத்துக் கொள்ளலாம்...... அதுக்குள்ளே அவசரமா...?" பூங்கொடி நாணினுள். ராணி அவளைக் கேலிமேல் கேலி செய்தாள்.

"ராணி... ஆசைப்படறதுக்குக் கூட ஒரு குறிப்பிட்ட பருவமும், வயதும் வேண்டுமென்பது சுத்த அபத்தமடி.........எல்லார்க்கும்—எல்லாச் சமயத்திலும் ஆசைகள் வருவதில்லையா என்ன?"

"இந்த வயசில் ஒரு வயசுப் பொண்ணுக்கு 'இந்த' ஆசை வருவதில் அர்த்தம் என்ன?" சிரித்தாள் ராணி, அழுத்தலாக.

"மண்ணுங்கட்டி...இந்த வயசு... எந்த வயசுடி...குழந்தைகள் தெய்வங்கள் என்பார்கள்...அதுகள்மீது ஆசை வச்சால் அதுக்கு ஏதேதோ சாக்கு வக்கிறியே......?" கொஞ்சலாகவும், நாணமாகவும் கோபித்து ராணியின் தலையில் ஓர் குட்டு வைத்தாள் பூங்கொடி. குட்டு கொஞ்சம் அழுத்தமாகவே இருந்தது. உறைத்தது ராணிக்கு. ராணி கண்களை மூடிக் கொண்டாள் இறுக்கமாக.

அப்போது தற்செயலாக பூங்கொடியின் பார்வை எதிர் வீட்டில் நிலைத்தது. 'ஐயோ......குழந்தை வாசலை விட்டு இறங்கித் தெருவுக்குவந்துவிட்டதே...?" குழந்தை தெருவில் இறங்கி நடை காட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட பூங்கொடி துடித்துப் போய் எழுந்தாள். ஒரே வினாடிதான்......எங்கிருந்தோ ஒரு 'கார்' வந்து அவளை உராத்துவிட்டுச் சென்றது. நல்ல வேளை......குழந்தை எப்படியோ காப்பாற்றப்பட்டு விட்டது. பூங்கொடிக்கு லேசான சிராய்ப்புத்தான். முழங்கையில் ரத்தத் துளிகள் பவழமாக வழிந்தது...

"அட பைத்தியமே...குழந்தைக்காகவா உன்னுடை உயிரையும் விடத் துணிந்தாய்?" என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தாள் ராணி.

"போடி ராணி...குழந்தைக்காக உயிரை மட்டுமல்ல, வேறு எதையுமே இழக்கத் துணியத் தவற மாட்டேன்..."

"என்ன சொன்னே? குழந்தைக்காக எல்லாவற்றையுமே இழந்து விடுவாயா?"

"ஆமாம், ஆமாம் ...... இந்த கொழு கொழு குழந்தையின் மேனியைத் தீண்டினுலே ஒரு இன்பம் சில்லிட்டு நிற்கிறது... இந்த என் செல்லக் குட்டிக்காக நான் எல்லாவற்றையுமே இழக்கத் தயார்தான்..." அவள் அழுத்தமாக, தெளிவாக அப்படிச் சொன்னுள்.

ஃ ஃ ஃ

அது யார் அது? அந்தக் குழந்தையை அந்த வாலியனிடம் எப்படி அன்னியோன்னியமாக பழகவிட்டிருக்கிருர்கள்? அந்தக் குழந்தையும் அவனிடம் எப்படி வாஞ்சையுடன் பழகிச் சிரிக்கிறது? ஒருவேளை அந்த வீட்டுக்கு வந்திருக்கும் உறவினனே அவன்? அதற்குத்தான் அவளைக் கண்டு எத்தனை ஆனந்தம். வாயெல்லாம் பல்லாகச் சிரிக்கிறதே, அடேயப்பா...... சிரிப்பைப் பாரு சிரிப்பை......ஓ! குழந்தையை அவன் எப்படியெல்லாம் கொஞ்சுகிறுன். தனக்கு அந்த பாக்கியம் இல்லையே. இன்னெரு குழந்தையின் மூலம் தன்னுடைய ஆசை அலைகள் ஓய்ந்து திருப்திபட்டு விடுமா என்ன? என்ன இருந்தாலும் அது இன்னெருவருக்குச் சொந்தமான அந்நியக் குழந்தைதானே? நினைத்த போது எடுத்தணைத்துக் கொஞ்சவும், மகிழவும் எப்படி இன்னெருவருக்கு உரிமை யிருக்க முடியும்? அப்படியே யிருந்தாலும் நினைத்த போது அடைகிற காரியமா என்ன? முடியாதே? தனக்கும் அது மாதிரி ஒன்று—ஒரு செல்வம் மழலை பிழற்றிக் கொண்டிருக்குமானுல்...ச்சே ...என்ன அபத்தமான நினைவு... கன்னி வயதில் குந்திதேவி மாதிரி ஒரு குழந்தைக்கு ஆசைப்பட்டுத்

(4-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை!

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 31—10—71 | இதழ் 16

அவசிய, அவசரம்!

இந்திய எல்லையில், பாகிஸ்தான் படைக் குவிப்புக் காரணமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, அநேகமாக மேலை, கீழை நாடுகள் பலவும், உணர்ந்திருக்கின்றன வென்றும், உடனடியாக கிழக்கு வங்கத் தீர்வுக்கு ஒரு அரசியல் தீர்வு தேவையென்றும் கருத்தறிவிக்க முன்வரக்கூடிய அளவுக்கு, பிரதமர் இந்திரா காந்தியின் இப்போதைய வெளிநாட்டுப் பயணம் மிகவும் பயன்பட்டிருக்கிறது என்று அறிந்து மகிழ்ச்சியடையாதவர்கள் இருக்க முடியாது.

வெறும் கருத்தறிவித்தல் என்பது மட்டுமல்லாமல் பலநாடுகள் பொருளாதார உதவியும்செய்ய முன் வந்திருப்பது, மேலும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்தக் கிழமை, பாரிசில் உதவி நாடுகளின் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, நடப்பு ஆண்டுக்கு மட்டும், இந்தியாவில் அகதிகள் பெருக்கம் காரணமாக மட்டும் ரூ. 525 கோடி தேவைப்படலாம் என்று மதிப்பீடு செய்து, செய்தி தந்திருக்கிறது.

கடந்த ஏழெட்டு மாதங்களாக, வரம்பின்றி இந்திய எல்லையைத் தாண்டி, வந்துகொண்டிருக்கும் பாக். அகதிகளின் எண்ணிக்கை இப்போது 95 இலட்சமாகிவிட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த, சுமத்தப்பட்ட சுமையின் பளுவை, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனும் சுமந்துகொள்ள வேண்டியவனாகி இருப்பதுடன், சுமை தாங்க இயலாத நிலையில் கூனிக் குறுகும் நிலைக்கும் தன்னை ஆளாக்கிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறான்.

உதவி நாடுகளின் குழு, இப்போது மதிப்பீடு செய்திருக்கும் 525 கோடியில், எந்த அளவுக்கு வெளிநாடுகள் உதவி செய்யப்போகின்றன என்பதை இப்போது கணித்துரைக்க முடியாது.

இந்தத் தொகையின் அளவு முழுவதையும் உலக நாடுகள்தான் கொடுத்துத் தீரவேண்டும் என்று, யாரும் நிர்ப்பந்தம் செய்ய முடியாது. இந்தியாவினால், அந்த உதவியை வெளிநாடுகளிலிருந்து பெற முடியாமற் போய்விட்டால் இந்தியக் குடிமகன் சுமக்க வேண்டியிருக்கும் சுமையின் பளுவை, இன்னமும் அதிகரிக்கச் செய்யத்தான் வேண்டி நேரிடும்.

இதனையும்கூட உதவி நாடுகளின் குழு, உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அதனாலேயே, இந்தியாவுக்கு மேலும் உதவிகளை வாரி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

பொதுவாக, இப்போதைய சூழ்நிலையில் உலக நாடுகளின் அனுதாபம் இந்தியாவின் பக்கம் மெள்ள வந்துகொண்டிருக்கும் நல்ல சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

இதனைத் தக்கபடி பயன்படுத்திக்கொண்டு, இந்தியக் குடிமகனின் அமைதியைக் குறைக்கும் கடமையில் இந்திய அரசு, அவசர, அவசியமாக ஈடுபட்டாக வேண்டும்.

படுகொலை புரியாதீர்!

சென்ற கிழமை இந்தியக் குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் ஒன்றின் மூலம், நிதி வசதிகள் திரட்டத்தக்க வகையில், சிலவகை இனங்களின்மீது வரி விதிப்பைக் கூடுதலாக்கியும், சிலவகை இனங்களின்மீது சர்சார்ஜ் விதித்தும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பின் செயல்பாடு உடனடியாக, நவம்பர் 15 முதல் அமுலாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் இப்போதைய ஒரு நெருக்கடி நிலையில் இந்த கூடுதல் வரிவிதிப்பு தவிர்க்க முடியாது என்று வாதம் கிளப்பப்பட்டால், அது சரியானதாகவே இருக்கும் என்றாலும், கூடுதல் நிதி ஆதாரங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இனங்கள் சரியானவைகள்தாமா என்பதிலே கருத்து வேறுபாடுகள் இல்லாமலிருக்க முடியாது.

இரயில் பிரயாணக் கட்டணங்களின்மீது 5 சதவீதம் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதிகரிப்புக் கட்டணம் காரணமாக அரசுக்கு, கணிசமான அளவுக்கு வருவாய் கிடைக்குமானால், அந்த வருவாய் ஏழை நடுத்தர வர்க்கத்திலுள்ள மூன்றாம் வகுப்புப் பயணிகளிடமிருந்து பெறுவதாகவே இருக்கும்.

விலைவாசி உயர்வுகள் காரணமாக ஏற்கெனவே நொண்டியாகிக் கொண்டிருக்கும் அந்தக் கடைசித்தர வர்க்கம், மேலும் மேலும் நொண்டியாகி விட வேண்டிய தவிர்க்க முடியாததொரு நிர்ப்பந்தமாகும்.

இதேபோல், பத்திரிகைகள்மீதும் இரண்டு காசுகள் சர்சார்ஜ் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியப் பத்திரிகைகள் பெரும்பான்மையும் பல பெரிய பணத் திமிங்கிலங்களால் நடத்தப்படுகின்றன என்பது உண்மையேயானாலும், பல சிறிய, நடுத்தர இதழ்களும் இருக்கின்றன என்பதும் மறுக்கப்பட முடியாதவையாகும்.

துணைக்கண்டத்தின் வாழ்க்கை நெருக்கடியால் மிகப் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பது பத்திரிகைத் துறையேயாகும்.

மற்ற மற்ற இனங்களின்மீது அதிக முதலீடு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் தானாகவே ஏற்பட்டு விட்டபோது, பத்திரிகைகளுக்காகவும், இதழ்களுக்காகவும் ஒதுக்கீடு செய்வது தேவையற்றது என்ற மனப்போக்கு நாளும் நாளும் வளர்ந்துகொண்டே வருவதன் காரணமாக, இப்போதே பல சிறிய, நடுத்தர ஏடுகளும், இதழ்களும் மறைந்துபோய் விட்டன; சில மூழ்கிக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் பத்திரிகைகளுக்கு இரண்டு காசு சர்சார்ஜ் என்றால், அதனைத் தங்கள் வாசகர்கள்மீது சுமத்தச் செய்யவும் முடியாது நிருவாகத்திலிருந்து அதனைச் செலுத்தவும் முடியாது. இந்த நிலையில் பத்திரிகைத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுவிட வேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

பத்திரிகைகள் மூலம் மத்திய அரசு, திரட்ட உத்தேசித்துள்ள தொகை சுமார் 7 கோடி அளவுதான். இதிலே சிறிய, நடுத்தர இனங்கள் மூலம் திரட்ட முடிவது சில இலட்சங்கள்தான் இருக்க முடியும்.

எனவே, மத்திய அரசு, துரிதமான கவனம் செலுத்தி, மூழ்கிக்கொண்டிருக்கும் சிறிய ஏடுகளை, முழுதாக மூழ்கடித்துக் கொல்லும் படுகொலைக் குற்றத்திலிருந்து விடுபடவேண்டும். ஃ

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயாவதா? கேவலம்? கேவலம்... பூங்கொடி ஜன்னல் அளிகளைக் கையில் பிடித்துக்கொண்டே நெடு நேரம் வரை எதிர் வீட்டுக் குழந்தையையும் அந்த அழகிய ஆடவனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

"என்னடி பூங்கொடி...பவுடரை இப்படிக் குரங்கு மாதிரி அப்பிக் கொண்டாய்......?" சிரித்துக் கொண்டே உள்ளே வந்தாள் ராணி.

"என்னடி சொன்னே......? குரங்கா? நானு குரங்கு...நீதான் ...குரங்கு..."

"இல்லேடி......உன் மூஞ்சியை கண்ணாடியிலே பாரு ... அப்புறம் தெரியும் லட்சணம்...கண்ட்ராவி ...கண்ட்ராவி..."

அவள் கண்ணாடியில் பார்த்தாள். முகமெல்லாம் சுண்ணாம்பு போல வெளுத்திருந்தது. குங்குமச் சாந்து முகம் முழுவதும் ரத்தக் கறையாய் அசிங்கமாய் அலங்கோலத்துடன் இருந்தது. அப்போதுதான் அவள் உணர்ந்தாள். எதிர் வீட்டுக் குழந்தையின் நினைவிலேயே, தான் தன்னை மறந்து விட்டிருந்தோம் என்பதை நினைத்தபோது ஒரு பக்கம் சிரிப்பாகவும், மறு பக்கம் நாணமாகவும் இருந்தது அவளுக்கு. எதிர் வீட்டின் 'மொத்த' அழகுகளில் தான் தன்னையே மறந்துவிட்டோமே? 'என்ன அபத்தமான காரியம் இது. என் மூளை இப்படியா போவது? எங்கோ பிறந்த குழந்தைக்காக ஏன் இப்படி ஏங்கி ஏங்கிச் சாகவேண்டும்?' டவல் ஒன்றை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டாள் அவள்.

"இல்லையடி ராணி...என்னுடை ஞாபகம் ஒரு நிலையில் இல்லை..."

"வயசுக் கோளாறு...அப்படித் தான் இருக்கும்..."

"ஏண்டி...உனக்கு எப்பப்பார்த்தாலும் இதே பேச்சுத்தானு? வாழ்க்கையில் காதலும், காமமும் தவிர வேறு எதுவுமே இல்லையா ...?"

"இருக்கு..."

"என்ன...?"

"...குழந்தை..."

"மண்ணாங்கட்டி...!"

"இப்போ அப்படித்தான் சொல்லுவே...பண்ணுங்கட்டியைத் திங்கறபோது என்னை நினைச்சுக்குவே..."

பூங்கொடிக்கு அழுகை அழுகையாக வந்தது. ஒன்றின்மீது ஆசை வைப்பதற்குக்கூட முறையான பழக்க வழக்கங்களில் அழுந்த வேண்டுமா? ஒன்றின் மூலம் ஒன்றை அடைகிற நிர்ப்பந்தமான வாழ்க்கை முறை ஏன் அமைந்தது? எனக்கு வேண்டியது குழந்தை. குழந்தை வேண்டும் என்பதற்காக நான் கல்யாணமும், தாம்பத்திய உறவும் கொண்டால்தான் முடியுமா?

"ராணி...இன்னொருவரின் துணையின்றிக் குழந்தை பெற முடியாதா...?"

"டீ...என்னடி இது...என்னென்னமோ கேட்கறே...? அதெல்லாம் பெரிய விஷயம். எனக்குத் தெரியாதுடியம்மா..."

"எதெல்லாம்......பெரிய விஷயம்?"

"குழந்தை பெறுவது..."

"நீ கல்யாணம் செஞ்சுகிட்டானு குழந்தையே பெத்துக்கமாட்டே இல்லையா.......குழவிக்கல்லுதான் பெத்துக்குவியாக்கும்.....போடி.... போடி......இன்னொருவரின் ஆசைகளை மதித்து வழி காண்பிக்கும் மனிதர்களை இந்த உலகில் காணவே முடியவில்லை என்னல். நீ மட்டும் என்ன விதிவிலக்கா...?"

ராணி ஒன்றும் பேசவில்லை. பூங்கொடியின் முகத்தில் ஏதோ உறுதி தெரிவதை மட்டும் அவள் அப்போது பூடகமாக உணர்ந்தாள். அது என்ன உறுதியோ?

ஃ ஃ ஃ

அன்றிரவு விடிய விடிய தன் அறையில் தனிமையில் படுத்துக் கொண்டே ஏதேதோ ஆங்கிலப் புத்தகங்களை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள் பூங்கொடி. கண்கள் சிவக்க, எரிய எரிய அப்படிப் படித்தாள் அவள். எல்லாம் வெளிநாட்டு ஆசிரியர்கள் எழுதிய 'செக்ஸ்' (Sex) சம்பந்தமான புத்தகங்கள்...அவளுடைய நினைவில் இப்போது தீவிரமான 'குழந்தை' ஆசை நிழலாடியது. குழந்தை வேண்டுமென்றல்......? இப்போது அந்த எதிர்வீட்டு ஆடவனின் ஞாபகமும் அவள் நினைவில் ஊர்ந்தது......அவனுடைய சுருள் முடி......சிவந்த கனி இதழ்கள்......பெண்மையின் அழகும், ஆண்மையின் மிடுக்கும் கொண்ட மதர்த்த தேகம்......சுந்தரமயமான ஓர் சௌந்தர்யமாக அவன் வந்து நின்று அவளது நெஞ்சை நிறைத்தான். அவள் அப்படியே தூங்கிப்போய் விட்டாள்.

ஃ ஃ ஃ

விடிந்தது—

அதோ எதிர் வீட்டில் இப்போது முன்னல், நாற்காலி ஒன்றில் அமர்ந்து அவன்—அந்த வாலிபன் தினசரி ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான். பூங்கொடியின் அம்மா வீட்டில் இல்லை. அவள் அவனைப் பார்த்தாள்...குழந்தை தரையில் விளையாடிக் கொண்டிருந்தது... குழந்தை...குழந்தை... ஓ...குழந்தை... குழந்தையின் ஆசை அவளை வெறிபிடித்தவளாய் ஆக்கியது. உடனே 'விர்'ரென்று இறங்கித் தெருவில் நடந்தாள். அவனை நோக்கி அவன் முன்னல் நின்றுள் பூங்கொடி, அவன் அவளை ஏறிட்டு நோக்கினன்.

பருவ எழிலாய்......திராட்சைப் பழக் கண்களை உருட்டி விழித்துக் கொண்டு மோகனச் சஞ்சாரமாய் அவள் மிளிர்ந்தாள். அவன் ஒரு கணம் தன்னையே மறந்துபோய் விட்டான், இந்த உலகம், இந்த வீடு, இந்த யுகம்...எல்லாமே இந்த ஞாபகங்களில் தங்காமல் எங்கோ ஓடி மறைந்தது...அல்லது யாரோ மறைத்தார்கள்...இருள்...இருள் ...இருள்! ஒரே அந்தகாரம்...

......பகல் பதினேரு மணி அளவில் தன் அறைக்குவந்த பூங்கொடி ஏனே குமுறிக் குமுறி அழுதாள். அது அவளுடைய அம்மாவுக்கும் புரியவில்லை. ஏன்? அவளுக்கே கூடப் புரியவில்லை.

"ஏண்டி பூங்கொடி இப்படி அழறே...? துணியெல்லாம் என்ன இப்படிக் கலைந்து போயிருக்கு... எங்கேடி புரண்டே...கண்ட இடத்திலே படுத்துப் புரண்டிருப்பே, குழந்தையாட்டமா... நீயே ஒரு குழந்தைதான் போ...இப்படியா குழந்தை மாதிரி துணியெல்லாம் அழுக்காக்கிவிட்டு இருப்பாங்க... ச்சே...சே தாவணியை இழுத்து விடடி ஆம்பளைக பார்க்கப் போருங்க...உனக்கு இதைக்கூடச் சொல்லணும்..." தாயாரின் பேச்சு அவளுடைய இதயத்தை சுத்தியலால் அறைவதுபோல இடித்தது. அவள் இதயத்தை யாரோ அறுத்து எரிவது போலவும் இருந்தது.

நீயே ஒருகுழந்தைதான் போ... இப்படியா குழந்தை மாதிரி துணியெல்லாம் அழுக்காக்கிகிட்டு இருப்பாங்க...?' ஆமாம்...நானே ஒரு

(16-ஆம் பக்கம் பார்க்க)

சோழமாதேவி

ராஜிமணாளன்

[29]

இடைக்காலத்தில் இவையெல்லாம்!

மகாகாமா அரண்மனை இடிந்து தரைமட்டமாகி விட்டது. சோழப் பேரரசின் தளபதி தியாக ராயர், எக்காளமாகச் சிரித்துக்கொண்டு எதிரே நிற்கிறார். மன்னர் காகவனதீசரும், மன்னி விகார தேவியும் கையில் ஒன்றாகப் பிணைத்து விலங்கிடப் பெற்று எள்ளாளப் பேரரசரின் எதிரே நிறுத்தப்பட் டிருந்தார்கள்.

இளவரசன் கமணனும், சிற்றிளவரசன் தீசனும் எப்படியோ தப்பியோடி காட்டுக்குள் நுழைந்துவிட் டார்கள். காட்டில் நுழைந்தவர்களில், கமணனை காட்டு மிருகமொன்று தாக்கிப் படுகாயப்படுத்தி விட்டது. உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் அவனை விட்டுவிட்டு, தீசன் தப்பியோடுகிறான்.

தப்பியோடி இருக்கவேண்டிய நந்திமித்திரன் இரும்புக் கம்பிகளால் பிணைக்கப்பட்டு, இழுத்துச் செல்லப்படுகிறான். மாவலிக் கங்கையாற்றில் நீர்ப் பிரவாகமெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் வேகம், கரையில் நதியையொட்டி வளர்ந்திருந்த பலதரப்பட்ட மரங்களையும் அடிபெயர்த்து இழுத் துக்கொண்டு, போய்க்கொண்டிருக்கிறது.

இழுத்துச் செல்லப்படும் நந்திமித்திரன், குதிரை யொன்றின்மீது ஏற்றிவிடப்பட்டு, அதன் வயிற்றோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டு, சில படை வீரர்கள் புடைசூழ அனுப்பப்படுகிறான்.

வீரர்களைத் தொடர்ந்து, எக்காளச் சிரிப்புடன் தளபதி தியாகராயர், சென்று கொண்டிருக்கிறார். என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை; சட் டென்று கடிவாளத்தைச் சுண்டி, குதிரையை விரைவு படுத்தி, நந்திமித்திரனை ஓட்டிக்கொண்டு, போய்க் கொண்டிருக்கும்போதே, சாட்டையினால் அடித்துக் கொண்டே போகிறார்.

ஒவ்வொரு அடிக்கும் ஒரு பயங்கரச் சிரிப்பு! சிரித்து முடித்ததும், இப்படித்தானே நீ என் மரு மகன் முருகபூபதியை அடித்தாய்? நீ துடிப்பதைப் போலத்தானே, பூபதியும் துடித்துத் துடித்து உயிர் விட்டான்! என்று கேட்டுக்கொண்டே மறுபடியும் மறுபடியும் அடித்துக்கொண்டே போகிறார்.

குற்றுயிரும் குலையுயிருமான நிலையில், நந்தி மித்திரன் மாவலிக் கங்கையாற்றின் கரையில் கொண்டுவந்து நிறுத்தப்படுகிறான்.

காவல் வீரன் ஒருவன், தயாராகக்கொண்டு வந்திருந்த திரிசூலம் ஒன்றை, கங்கையாற்றின் கரை யில் குழிதோண்டிப் புதைத்து, நிறுத்துகிறான்.

தொய்ந்து போன நிலையில், பிடித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நந்திமித்திரனுக்கு சூலம் நிறுத் தப்பட்ட அந்தக் காட்சி சுட்டிக் காட்டிப்படுகிறது.

முன்னேற்பாடாக, அந்த இடத்திற்கு அழைத் துக் கொண்டுவரப்பட்டிருந்த விகாரதேவியும், காக வனதீசரும், கண்களில் நீர்மல்க கவலையே உருவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள்!

குதிரையை விட்டுக் கீழே இறங்கிய தியாகராயர் ரோகண அரசக் குடும்பத்தினரின் முன் வந்து நின்று, இடுப்பில் இடது கையை வைத்துக்கொண்டு, மறு கையால் நந்திமித்திரனைச் சுட்டிக்காட்டி "இந்தக் கோழையை நம்பியா நீங்கள் அனுராதபுரத்தைப் பகைத்துக் கொண்டீர்கள்? இந்தக் கொடியவனை நம்பியா நீங்கள், சோழ நாட்டின்மீது படையெடுத் தீர்கள்? எள்ளாளர்தான் எங்கள் இதயத் தெய்வம் என்பது உங்களுக்குத் தெரியாதா? எள்ளாளப் பேரர சருக்கு ஒன்று என்றால், இங்குள்ள தமிழர்கள் ஒவ் வொருவருக்கும் கண்ணில் முள் தைத்தது போலா கும் என்பதை அறிந்துமா நீங்கள், எங்கள்மீது பகை கக்கினீர்கள்? தமிழர்களின் வீரத்தை, அத்தனை எளி தாகவா நீங்கள் நினைத்துக்கொண்டீர்கள். வங்கம் விடுத்து, வங்கக் கடலையே அடிமைகொண்ட பரம் பரை என்பதை அறிந்துமா நீங்கள் ஆணவம் படைத் தீர்கள்?

பேடிகளே! அன்பு காட்டித் தமிழனை அடிமை கொண்டுவிட முடியும்! அடிமைப்படுத்தி அவனை அடக்கி ஆண்டுவிட முடியும்; நாய்போல நன்றிக் குணம் படைத்தவன் தமிழன்! அந்த மான மறவர் குலத்தை, ஆணவத்தின் மூலம், அடிமை கொள்ள நினைத்தீர்களே! முடியுமா உங்களால்! முடிந்ததா உங்களால்!! என்று கேட்டுவிட்டு, மீண்டும் நந்தி மித்திரனைச் சுட்டிக் காட்டி, இந்தப் பேடியின் முழு வடிவையும் கடைசியாகப் பார்த்து, மனதில் பதித்து வைத்துக்கொள்ளுங்கள்! இன்னும் சில விநாடிகளில், அவன் தலை கொய்யப்பட்டுவிடும்! கொய்யப்பட்ட அந்தத் தலை, அதோ அந்த திரிசூலத்தின் மேல் செருகி வைக்கப்படும். கைகள் ஒவ்வொன்றாகத் துண்டாடப்படும்; துண்டாடப்படும் அந்தக் கரங்கள் மரக் கிளைகளிலே கட்டி தொங்கவிடப்பட்டு, அவை களின் அருகே, "தமிழர்களுக்கெதிராக வாளேந்திய கரங்கள் இவை" என்று கல்லெழுதி வைத்துக் காட் டப்படும். நிறுத்தப்பட்டிருக்கும் சூலத்தின் அருகே, "தமிழனை எதிர்த்தேன் - தலையைக் கொடுத்தேன்"— என்று கல் நிறுத்தப்படும்! வெட்டப்படும் கால்களுக் குக் கல்லறை யெழுப்பி, அதிலே "தமிழனுக்கெதிராக நடந்த கால்கள் இவை! கல்லறை கண்டன" என்று பொறிக்கப்படும்! அதோ, அந்த மார்பகத்துள்ளே குடிகொண் டிருக்கும் இதயத்தைத் "தனியாகப் பெயர்த்தெடுத்து, பாதுகாப்புத் திரவமிட்டுப் [illegible] து

காத்துக் கண்ணுடிப் பெட்டிக்குள் வைத்து அருகே "தமிழனுக்கெதிராக துரோகம் நினைத்த இதயம் இது—துணிக்கப்பட்டது" என்று பொறித்து வைக்கப்படும்! உங்களுக்காக மட்டுமல்ல—இனி வருங்காலத்திலும் தமிழனுக்கெதிராக யார் என்ன துரோகம் நினைத்தாலும், அத்தகையவர்களுக்குக் கிடைக்கப் போகும் பரிசு இதுதான் என்று எடுத்துக் காட்டிக்கொண்டே இருப்பதற்காக!" — என்று சொல்லிக்கொண்டே நந்திமித்திரனை அணுகி, தன் கரங்களிலிருந்து உடை வாளால், அவனது தலையைச் சீவி விடுகிறுர் தளபதியார்.

ஒரே நேரத்தில் காகவன தீசரும், விகாரதேவியும் கண்களை மூடிக்கொண்டு "ஆ" என்று அலறி விடுகின்றனர்! எங்கோ வெகு தொலைவிலிருந்து கமணனது முணகல் ஒலிக்கிடையேயும் 'ஆ' என்ற அலறல் ஒலித்து ஒய்கிறது!

ஃ ஃ ஃ

விகாரதேவியைத் தூக்கி அணைத்துக்கொண்டு, தான், எதிரிகளுக்குச் சாதகமான முறையிலே திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டுக் கொண்டிருப்பது தவறல்லவா என்று ஒருகணம் எண்ணிப் பார்த்த காகவன தீசரின் மனத்தில், தான் அவ்வாறு செயல்படுவதின் விளைவு, இறுதியில் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தபோது, மேலே காட்டிய காட்சிகள், அவரது மனத்திரையில் படமாகத் தெரியத் தொடங்கிவிட்டன! கிலி கப்பிக் கொண்டவுடன், முதுமை காரணமாகத் தொய்ந்து போயிருந்த அவரது உடல், மெள்ள நடுங்கத் தொடங்கிவிட்டது. அதனுல், அணைப்பின் இறுக்கத்தை மேலும் இறுக்கிக் கொண்டபடியே, "அது நடக்கக்கூடாது தேவி! நடக்கவிட மாட்டேன் தேவி!" என்று வாய் பிதற்றிவிட்டார் தீசர்.

"என்ன வந்துவிட்டது பிரபு உங்களுக்கு? ஏன் உடம்பு இப்படி நடுங்குகிறது?" என்று கேட்டுக்கொண்டே, அணைப்பின் இறுக்கத்தைத் தளத்தி, விடுபட்டுக் கொண்டே, "நீங்கள் அமருங்கள் பிரபு!" என்று கூறி, கரங்களைப் பற்றி அழைத்துக்கொண்டே போய் இருக்கையில் அமரவைத்து விட்டு, தீசரின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்து 'ஏன் பிரபு இப்படி அனலாகக் கொதிக்கத் தொடங்கிவிட்டது உடம்பு? சற்று முன் இப்படி இல்லையே!" என்று கேட்டாள்!

"ஒன்றுமில்லை தேவி! எதையோ எண்ணிக் கொண்டேன்; பலவீனமான இதயம், அதனைத் தாங்கிக்கொள்ள முடியாமல், சூடேறிப் போய் விட்டது. இதயத்தின் சூடுதான் உடலெங்கும் பரவி விட்டது தேவி! சற்றுநேரத்தில் எல்லாம் சரியாகி விடும்." என்று கூறிவிட்டு, "தேவி, அனுராதபுரத்தின் மீதான போர்த் திட்டங்கள், உன் விருப்பப்படியே நடக்கட்டும்!—நான் சற்றே ஒய்வெடுத்துக் கொள்கிறேன்" என்று கூறி, இருக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார்!

திடீரென என்ன எண்ணிக் கொண்டிருப்பார் மன்னர் எனபதைப்பற்றி அசை போட்டுக்கொண்டே அங்கிருந்து வெளியேறினுள் விகாரதேவி.

மஞ்சத்தில் படுத்துக்கொண்ட காகவனதீசரது மனம், எரியுண்ட துரும்புபோல் கருகத் தொடங்கிவிட்டது. நான் ரோகணரடாவுக்கு எதிராகச் செயல்படுகிறேனு? என்று மறுமுறை வாய்விட்டுக் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து அனுராதபுரத்துக்கு ஆதரவாகவா எனது திட்டங்கள் இருக்கின்றன? என்றும் கேட்டுக்கொண்டார்!

"ஆமாம்! எள்ளாளச் சோழப் பேரரசருக்கு அனுகூலம் தரக்கூடியவைதான் எனது திட்டங்கள்! ரோகணுவுக்கு எதிரானவைதான் தமது செயல்கள்!" —என்றும் சொற்களை உகுத்தன அவரது தளர்ந்த உதடுகள்.

"எனது இலட்சியம் அது அல்லவே! போர் கூடாது என்பதுதானே எனது இலட்சியம்! எள்ளாளர் போர்முகத்துக்கு இழுக்கப்படக்கூடாது என்பதுதானே எனது எண்ணம்! நான் எப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்?"—எண்ணிப் பார்க்கத் தொடங்கிவிட்டார் ரோகண மன்னர்.

அதற்குப் பிறகு, அவரால் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்க இயலவில்லை. உடனடியாகத் தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று எண்ணினுர். எண்ணிக்கொண்டே, இருக்கையிலிருந்தெழுந்து, உடைகளை மாற்றிக்கொண்டு, வந்து மீண்டும் அமர்ந்தார்.

பணியாளை அழைத்து, பயணத்துக்குத் தேர் ஒன்றைத் தயாரில் வைத்திருக்கச் சொல்லி அனுப்பினுர். அவரது எண்ணங்கள், ஆமத்திய மகாதேரரைப் பற்றியும், அவர் மேற்கொண்டிருக்கும் பணி குறித்தும் நினைவுக்குக் கொண்டு வந்து சேர்த்தன. அதிலே மூழ்கிக் கொண்டிருந்தார் மன்னர்.

தேர், தயாராகி விட்டதென்று பணியாள் வந்து தகவல் தந்தான். பரபரப்போடு எழுந்து அரண்மனை முகப்புக்கு வந்து, தேரில் ஏறி அமர்ந்தார். தேர் புறப்பட்டது. "மகானுகல சேதியத்துக்குப் போ" என்று உத்திரவை உகுத்தார் மன்னர்.

சேதியத்தின் முகப்புக்குத் தேர்வந்து நின்றபோது, மன்னர் வியந்தே போய்விட்டார்! ஒரு கிழமைக்குள்ளாக இவ்வளவு மாற்றமா? என்று வியப்பை வாய்விட்டு வெளியிட்டார்.

சேதிய முகப்பில் தேர்வந்து நின்றதும், தூரத்திலிருந்த தலைமைச் சிற்பி, திருவல்லபதத்தர் ஓடோடி வந்து வணங்கி வரவேற்ருர், மன்னரை. திருவல்லபர் தொடர, சேதியம் முழுவதையும் பார்வையிடத் தொடங்கினுர் மன்னர். மனம், மகிழ்ச்சியால் நிறைவுற்றதன் அறிகுறியாக, முகம் பொலியத் தொடங்கியது. சற்று முன் ஏற்பட்டிருந்த சலனம் அடியுடன் மறைந்தொழிந்தது. புதிய தெம்பும் வந்து சேர்ந்தது. உள்ளம் நிரம்பிய மகிழ்ச்சியுடன், அருகத் தேவன் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருந்த இடத்தின் எதிரே வந்து நின்று, அதனையே வெகுநேரம் வரையில் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். புத்ததேவனின் சிலையில் எதையோ குற்றம் கண்டு பிடித்து விட்டவர்போல, பதறி, "அடடா! கண்கள் இப்படியல்லவா இருக்கவேண்டும்? — விழி திறந்த நிலையில் இருக்கிறதே!" என்று அருகே நின்றுகொண்டிருந்த திருவல்லபரிடம் சொன்னுர்!

திருவல்லபரும், அதனைக் கவனித்து, "உண்மைதான் அரசே! இதுவரையில் நாம் சமைத்த எல்லா புத்த சிலைகளும், அப்படித்தான் கண்கள் திறந்த நிலையில், அருள் ஒளி பரப்பவும் தோற்றத்தோடு அமைத்திருக்கிருேம். அதனுலேயே இதனையும்அப்படி அமைத்துவிட்டேன்" என்ருர்."

"இருக்கலாம் வல்லபரே! என்ருலும், இது, இமைகள் முடியும். மூடாததுமான ஒரு மோனநிலை

யில் இருக்கவேண்டு மென்றுதான் நான் விரும்பு கிறேன். அப்படி மாற்றிவிட முடியுமா?'' என்றார் மன்னர்.

''கொஞ்சம் சிரமம்தான்; முயன்று பார்க் கிறேன்'' என்றார் சிற்பியார்.

''புத்தபிரானின் கண்கள் மட்டும் நான் விரும்பு வதுபோல் அமைந்துவிட்டால்-நான் இந்தச் சேதியம் எப்படி இருக்க வேண்டுமென்று விரும்பினேனோ, அப்படியே அமைந்திருக்கிறது என்ற பூரிப்பால், நான் நிறைவுபெற முடியும்!'' என்று கூறிக் கொண்டே அப்பால் நகர்ந்தார்.

பல இடங்களையும் பார்வையிட்டு, மும்மணிகள் ஞானபோதனைக் கூடத்தின் உள்ளே நுழைந்தார். கூடத்தைச் சுற்றிலும், சுவற்றில் பௌத்த தேவனின் பல்வேறு அருள் காட்சிகள் சித்திரமாகத் தீட்டப் பெற்றிருந்தன. ஒரு இடத்தில் அசோக மன்னன், மகத மன்னனுடன் பொருதுகின்ற காட்சியும், இன்னொர் இடத்தில் போர்க்களத்தில் தலையிழந்த முண்டங்களும், காலிழந்த முடங்களும், வாளும், வேலும் தாக்கி உயிர் இழந்த வீரர்களும் அலங்கோலமாகக் கீழே கிடப்பது போலவும், அதன் அருகேஅசோக மன்னன் நின்று கவனித்துவிட்டு, தானையால் முகம் பதித்துக் கொள்வதுபோன்றும் சித்திரிக்கப்பட்டிருந் தது. அதனையடுத்து, அசோகன், பௌத்த மதத்தில் சேர்ந்து ஞான தீட்சை பெறுவது போன்றும் வரை யப்பட்டிருந்தது.

இவற்றையெல்லாம் கண்ட காகவன தீசருக்கு மறுபடியும் போர் பற்றிய எண்ணங்கள் வந்து சூழ்ந்துகொண்டன. மேற்கொண்டு சேதியத்தைச் சுற்றிப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டு, முகப்பை நோக்கித் திரும்பினார்.

தேரில் ஏறிக்கொண்டே, ''விரைவில் விழாவை நடத்தி விடலாம் இல்லையா தத்தரே!'' என்று கேட்டு, அமர்ந்தார்.

''தங்கள் சித்தம்போல் செய்யலாம் பிரபு'' என்றார் திருவல்லபதத்தர். ''நல்லது; நான் கூறியபடி இமைகளை மாற்ற முயலுங்கள். வருகிறேன்'' என்று கூறி, தேரோட்டியிடம், சீதள பர்வத விகாரைக்குப் போ'' என்று உத்திரவிட்டார்.

சற்றை நேரத்துக்கெல்லாம் தேர், விகாரை முன் வந்து நின்றது. தேரைவிட்டிறங்கி உள்ளே நுழைந்து விருந்தினர் மாளிகையின் பக்கம் திரும்பினார். அங் கிருந்த தேரர் ஒருவர், ''மகாதேவர் அவர்கள் நேற்று காலையிலேயே புறப்பட்டுவிட்டார் அரசே!'' என்றார். அதைக் கேட்டதும் மன்னரின் மனம் கூம்பி விட்டது! 'நிர்வாகி எங்கே?' என்றார் தேரரைப் பார்த்து. அதற்குள் நிர்வாகியே அங்கு வந்து நின்று மன்ன ருக்கு வணக்கம் செலுத்தினார். காகவனதீசர், சில குறிப்புக்களைச் சொல்லி, மகானுகல சேதியம் அடுத்த மதித்திங்கள் ஏழாம் நாளில் சிறப்புற திறக் கப்படும் என்ற தகவலையும், அதில் அனைவரும் தவறா மல்பங்கேற்கவேண்டும் என்ற தகவலையும் தெரிவித்து அழைப்புக்கள் அனுப்பும்படி உத்திரவிட்டு விட்டு, மீண்டும், தேரேறி அரண்மனை வந்தடைந்தார்.

ஏறக்குறைய உச்சிப் பொழுதாகிவிட்டது. அரண்மனை வந்து சேர்ந்த தீசர், அந்தப்புரம் நுழைந்து விகார தேவி இருந்த இடத்துக்கு வந்தார். மன்னரை எதிர்கொண்டழைத்த விகாரதேவி, ''உடல்நிலை எப்படி இருக்கிறது பிரபு!'' என்றாள்.



''அஞ்சத்தக்கதாக அப்படி எதுவும் இல்லை தேவி. இப்போது நலமாகவே இருக்கிறேன். கிடக்கட்டும் தேவி...'' என்று கூறிக்கொண்டே, மஞ்சத்தில் சென்று அமர்ந்துகொண்டு ''தேவி, விஜிதபுரக் கோட்டைத் தலைவன் வீரபாகுவை, நீ விரைவில் சந்திக்க வேண்டியிருக்கலாம் என்று நினைக்கிறேன்- உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால்'' என்று கூறினார்.

முற்றிலும் எதிர்பாராத ஒரு நேரத்தில், எதிர் பாராத ஒரு சூழ்நிலையில், வீரபாகுவின் பெயர் ஒலிக் கக் கேட்டதும், விகாரதேவி, ஒருகணம் அதிர்ச்சி யடைந்துவிட்டாள் என்றாலும், அந்த அதிர்ச்சியினை வெளிப்படக் காட்டாமல், சமாளித்துக்கொண்டு, ''நானா, வீரபாகுவையா?'' என்று கேட்டாள்.

அப்படிக் கேட்டுவிட்டாலும் கூட, அவளது இதய வீணை மீட்டிவிடப்பட்டுவிட்டதைப் போல, ஒலி முழக்கத் தொடங்கிவிட்டது. பழைய நினைவுகள் எல்லாம் படமாகத் தெரியத் தொடங்கிவிட்டன. பல் வேறுபட்ட சந்தர்ப்பச் சூழ்நிலைகளால், வீரபாகுவை பற்றியும், அவன்மீது கொண்ட காதல் வேட்கை யினைப் பற்றியும் கூட மறந்துவிட்டிருந்த விகார தேவி, இப்போது, மீண்டும் அந்த எண்ணம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதே இடத்தில் தன்னைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டாள்.

அந்த உணர்வுகளைத் தூண்டிவிடுவதைப்போல, மன்னரும் ''விஜிதபுரம் போவதென்றால், உனக்கு மகிழ்ச்சி ஏற்படுமே தேவி! மனதிற்கு மகிழ்வூட்டக் கூடிய காரியங்கள் அங்கே இருக்கின்றனவே!'' என்றார்.

விஜிதபுரத்தையடுத்த ஒரு சிற்றூரிலிருந்து நந்தி மித்திரனல் ஏற்பாடுசெய்யப்பட்டு, போர்க் கருவிகள் தயாராகி, அவை தம்பளே குகைக் கோயிவில் சேமிக்கப் படுகின்றன என்ற செய்தியை எப்படியோ அறிந்து கொண்டிருந்த காகவன தீசர், அதனைக் சூசகமாகச் சுட்டிக் காட்டி, அப்படிச் சொன்ஞர்.

ஆஞல், விகாரதேவியோ, வீரபாகுவுக்கும், தனக்கும் இடையே உருவாகிக்கொண்டிருந்த தொடர்பு பற்றிக் கூறுவதாக நினைத்துக் கொண்டாள். குற்றமுடைய நெஞ்சல்லவா விகாரதேவிக்கு! முன்பொரு நாள், படகில் வந்த தன் வாழ்க்கை வரலாறு பற்றி எடுத்துக் காட்டும்போதுகூட. வீரவாகுபற்றிச் சுட்டிக் காட்டியதும், பின் பேச்சை வேறு திசையில் திருப்பிக் கொண்டதும் அவளது நினைவுக்கு வந்தாலும், இப்போது மன்னர் தனக்கு ஒரு தேர்வு வைப்பதாகவே நினைத்தாள். திறமையோடு, அதனைச் சந்தித்துத் தீரவேண்டும் என்று மனதுக்குள் திடப்படுத்திக்கொண்டு, "பிரபு! நானே புறப்பட வேண்டிய அவ்வளவு முக்கியத்துவமுடையதென்று நீங்கள் ஒன்றைக் கருதிஞல், நான் அதனை மறுத்துரைக்கப் போவதில்லை—மகிழ்ச்சியுடன் போய்வருகிறேன்" என்ருள்.

விஜிதபுரம் பயணம்என்ருல் விகாரதேவி மறுக்க மாட்டாள் என்பதை மன்னர் அறிந்திருந்தாலும், இப்போதைய சூழ்நிலையில் வீம்புக்காக ஒருவேளை மறுக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த மன்னர், விகாரதேவி ஒப்புக்கொண்டவுடன் மகிழ்ந்து போஞர்.

"தேவி! உன் மனம் களிக்கத் தக்கவைகளைப்பற்றி மட்டுமே நான் இனி சிந்திப்பதென்று முடிவெடுத்து விட்டேன். இன்னும் நான்கு கிழமை கழித்துச் சென்ருல் போதும். வீரபாகு, எள்ளாளச் சோழரின் மிக நம்பிக்கைக்குரிய கோட்டைத் தலைவன். பெரும் படைப் பிரிவு, அவனது தலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. எல்லாவகையான உனது சாகசங்களையும் பயன்படுத்தி, அவனை நம் பக்கம் திருப்பி விடவேண்டும். இது உன்ஞல் முடியுமென்ருல், இளவரசன் கமணன் பேரசன் கமணன் ஆகிவிட்டான் என்றே நீ நினைத்துக் கொள்ளலாம்" என்ருர்.

தனது கட்டுடல்மீது கருத்திழந்து கிடக்கும் வீரபாகுவை, தன் வழிக்குத் திருப்புவது எளிதான காரியம்தான் என்று மனதில் நினைத்துக்கொண்டு, "முயன்று பார்க்கிறேன் பிரபு" என்ருள் விகாரதேவி. "முடித்து வருகிறேன்" என்று சொல்ல வேண்டும் தேவி!" என்று சொல்லிவிட்டு, "நோன்மதி கழிந்த மூன்ரும் நாள் நீ புறப்பட்டால் போதும் ஆஞல் நீ எங்கே, எதன்பொருட்டு போகிருய் என்பது, போவதற்கு முன்பும், போய்வந்த பின்பும் இரகசியமாகவே இருக்கவேண்டும்" என்ருர். "அப்படியே ஆகட்டும் பிரபு" என்று கூறிவிட்டு, மரத்தில் சாய்ந்து மெள்ள கண்களை மூடிக்கொண்டு, வீரபாகுவின் திரண்டு, உருண்ட பனைத் தோள்களில் தொத்திக்கொண்டிருக்கப்போகும் அந்த இன்பக் காட்சிகளைப்பற்றிக் கற்பனைகளில் மூழ்கிஞள்.

அதே நேரத்தில் மன்னரது எண்ணங்கள்—ஆப்கனிஸ்தானத்தை நோக்கிப் பறந்துகொண்டிருக்கத் தொடங்கியது.

ஃ ஃ ஃ

திணறித் திணறி, ஒரு முழுத்திங்களும் தேய்ந்து போயிற்று.

அந்த இடைக்காலத்தில், மகானுகல சேதியத்தின் புனித விழா, மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. ஆமத்திய மகாதேரர் எதிர்பார்த்ததைவிடவும் சீரோடு சிறந்தது. அவர் விரும்பியபடி, விகாரதேவியும் கமணனும் மட்டும் அல்ல—நத்திமித்திரன் கூட விழாவில் கலந்துகொள்ளாமலிருந்தது, ஆமத்தியருக்குப் பேராச்சரியமாக இருந்தது. எப்படி அது சாத்தியமாயிற்று என்பதைக் கேட்டறிய நினைத்தார் ஆமத்தியர். அது தனது மதிப்புக்குக் கேடுண்டாக்கக் கூடும் என எண்ணிக்கொண்டு, மன்னரைப் பாராட்டிஞர். மன்னர் சேதியம் கட்டிக்கொண்டே இருப்பதன்மூலம், பௌத்த மதத்துக்கும், அதனைப் பரவச் செய்வதற்கும்,ஆற்றுகின்ற தொண்டினைப் பாராட்டுவதைப்போல, போர் முயற்சிகளுக்கும், பார்வெறிக்கும் பௌத்தம் இடமளிக்கவில்லையென்பதை, மிகத் தெளிவாக எடுத்து விளக்கிஞர் ஆமத்தியர். பல்லாயிரக் கணக்கான பௌத்தர்கள் கைதட்டி ஆரவாரித்தனர், அதுகேட்டு.

ஏற்கெனவே, சிற்றிளவரசன் தீசன் எடுத்துக் காட்டி இருந்தபடி, போர் காரணமாக, வாழ்க்கை சுமையாகிவிடக்கூடும் என்று அஞ்சிக்கொண்டிருந்த பொதுமக்கள் — ஆமத்தியரின் அந்தப் பேச்சைக் கேட்டு, கைதட்டி, ஆரவாரித்ததோடு நிற்கவில்லை; "போர்வேண்டாம்; போர்வெறி கூடாது; போரை பௌத்தம் ஆதரிக்கவில்லை" என்றும் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

போருக்கெதிரான கருத்துவிதை தூவப்பட்டு விட்டது என்று ஆமத்தியரும் மனம் மகிழ்ந்தார். அதுபோலவே, காகவனதீசரும் களிப்புக்கொண்டார்.

பௌத்தர்கள் கூட்டத்திலிருந்து மட்டும் சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமான தேரர்களும், பௌத்தர்களும், மேடைக்கு வந்து, ஆமத்திய மகாதேரருக்கு முன்பாக, தாங்கள் ரோகணுவின் போர் நடவடிக்கையினை ஆதரிக்கப் போவதில்லை என்று சூளெடுத்துச் சொல்லிச் சென்றனர்.

பௌத்தர்களுக் கிடையே ஒரு ஒற்றுமை உணர்வை, ரோகணுவின் போர்க் குணத்துக்கு எதிரான ஒரு உணர்வை உண்டாக்கி விட்டதிலே ஆமத்தியருக்குப் பெரும் பங்கு இருந்தது. என்ருலும் அதற்கான விதையை விதைத்தவர் என்ற முறையில் ரோகண மன்னர் சிறப்புச் செய்யப்பட வேண்டும்.

ஆஞல், அதற்கு மாருக, கூடியிருந்த கூட்டத்தினர்க்கிடையே இருந்து, "ரோகணு ஒழிக! ரோகணுவின் போர் வெறி ஒழிக! ரோகண மன்னர் ஒழிக!" என்ற குரல்கள் எழுந்தபோது, மன்னர் காகவன தீசர்கூட ஒரு கணம் அதிர்ந்துவிட்டாலும், அடுத்த விஞடியே, அந்தக் கூச்சல், தனக்கு எதிரானவை அல்லவென்றும், போர்வெறிக்கு மட்டுமே எதிரானவை யென்றும் எண்ணிக்கொண்டு அமைதியாஞர்.

விழா முடிவுற்றுத் திரும்பும்போது, ஆமத்தியர், மன்னரைப் பார்த்து, "அரசே! அன்று தாங்கள் கோரிய வேண்டுகோளுக்கு, விடை கிடைத்துவிட்டதல்லவா!" என்ருர்!

"மகிழ்ச்சி, மகாதேரர் அவர்களே! நான் எதிர்பார்த்ததை விடவும். அதிகமான அளவுக்கு தேரர்களை என் கருத்தின் பக்கத்திலே கொண்டு வந்து சேர்த்து விட்டிருக்கிறீர்கள். நெஞ்சு நிரம்பிப்

போயிருக்கிறேன். நன்றிகளைப் படைத்துக்கொள்கிறேன்!" என்றார் மன்னர்!

ஒரு புன்முறுவலுடன் ஆமத்தியர், அடுத்துக் கூடவிருக்கும் பௌத்த மகாசபைக் கூட்டத்தில், அரசே! இதன் எதிரொலியை நான் சந்திக்க வேண்டியிருக்கும்!" என்று கூறினார். அதனை அவர் கூறி முடித்தபோது, புன்முறுவல் மறைந்து, கலக்கம் குடி கொண்டிருந்தது அவரது கண்களில்!

"நாம் பௌத்த நெறிக்கு மாறாக—புத்த பிரானின் எண்ணங்களுக்கு எதிராகச் செயல்படவில்லை என்ற திருப்தி, உங்களுக்கு ஏற்பட வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள்" என்று கூறிவிட்டு, வணங்கி, விடைபெற்று அகன்றார் மன்னர்.

ஃ ஃ ஃ

விழா முடிந்து இரு கிழமைகளுக்கு மேலாகிய பிறகு, மீண்டும் அந்த விழா பற்றிய நினைவில் மிதந்து கொண்டிருந்த மன்னருக்கு, தீசனைப் பற்றிய நினைவு வந்ததும், உடனே புறப்பட்டு, தீகவாபிக்குப் பயணமானார்.

பணியாள் மூலம் அனுப்பி இருந்த ஓலைக்கு, நேரடியாகப் பதில் கூறுவதைப்போல, தேர்களின் எண்ணிக்கை போதும் எனக் கூறினார். இரவு முழுவதும் விழித்திருந்து தீசனுக்கு, ஏதேதோ அறிவுரைகள் கூறிக் கொண்டிருந்தார்! அந்த அறிவுரைகளின் பிழிவு, கமணனுக்கும், விகாரதேவிக்கும் எதிரானதாக இருந்தன.

தந்தை, போரை விரும்பவில்லை என்பது குறித்து தீசனுக்கு வருத்தமேற்பட்டாலும், அவர் எடுத்துக் கூறிய சில விஷயங்கள் மூலம், அவன் மிக எளிதாக, கமணனுக்கும், விகாரதேவிக்கும் எதிராகத் திரும்பி விட்டான்!

அந்த ஆத்திரம், தந்தையின் முன்னிலையிலேயே, உடைவாளை உருவி, கமணனைத் தாக்குவதாகச் சூள் எடுக்கும் அளவுக்கு உயர்ந்தது!

அப்புறம் என்ன! மகாகாமாவுக்கும், தீகவாபிக்கும் இடையேயிருந்த தொடர்பு அறுந்தது. தீசன், தீகவாபியில், திரட்டி வைத்திருந்த படைப் பிரிவு கலைக்கப்பட்டு, தேர்கள் தீய்க்கு உணவாக்கப்பட்டு, அவன், கல்யாணிக்குச் சென்று தங்கிவிட்டான் என்ற செய்தி, மன்னரைத் தவிர, வேறு எவருக்குமே தெரியாமல் போய்விட்டது. தெரியவிடாதபடி மன்னரும் கண்காணித்துக் கொண்டார்!

விஜிதபுரம் என்று திரும்பி இருந்த அரசி விகாரதேவி, வேறுவிதமான மனநிலைக்குத் தள்ளப்பட்டிருந்ததால், அதுபற்றி அக்கறை காட்ட முடியாதவளாகிப் போனாள்! விஜிதபுரம்நிகழ்ச்சி அவளது மனத்தை அரித்துக் கொண்டிருந்தது; புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தாள் அவள்! திரும்பிய அவள், அங்கே நிகழ்ந்தவைப்பற்றி சொல்லக் கேட்ட மன்னரது உள் மனம், பூரித்துப் புடைத்தது!



சுவைத்ததைச் சொல்கிறோம்

அடேயப்பா, இவ்வளவு அழகான மலரை, சிறப்பான மலரை, ஒரே ஒரு ரூபாய் விலையில் எங்களுக்குக் கொடுத்தது, எங்கள் பாக்கியம்தான்.

கு. தனிகாசலம், திருச்சி.

இந்த ஆண்டு வெளிவந்த எல்லா மலர்களைக் காட்டிலும், எங்கள் 'காஞ்சி' வெளியிட்ட மலர்தான் எங்கள் இதயத்தை நிரப்பி இருக்கிறது.

கே. சந்திரஹாசன், புதுச்சேரி.

'காஞ்சி' ஆண்டு மலர் நிறைவாக இருக்கிறது. சென்ற பொங்கலில் ஏமாற்றிய நீங்கள், இப்போது எங்கள் உள்ளத்தை நிறைத்து விட்டீர்கள்.

செ. பொ. கல்யாணம், மதுரை.

இந்த ஆண்டு வெளிவந்திருக்கும் 'காஞ்சி' மலரில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களது 'இரத்தம் பொங்கிய இருபது ஆண்டுகள்' என்ற எழுத்தோவியத்தைப் படிக்கும்போது, அண்ணா மறைந்துவிட்டார் என்று என்னால் நினைக்க முடியவில்லை. குறைவான விலையில் தரமான படைப்பு—இந்த ஆண்டு மலர்!

எஸ். ஆனந்தன், மன்னார்குடி.

அறிஞர் அண்ணா பிறந்தநாள் & ஏழாம் ஆண்டு மலருக்கு விலையாக இரண்டு ரூபாய் கேட்டிருந்தாலும் மகிழ்வுடன் கொடுத்திருப்போம்.

சி. அண்ணாமலை, திருத்தணி.

'காஞ்சி' ஆண்டு மலரில் கலைஞர் அவர்கள் எழுதி இருக்கும் கவிதையைப் படிக்கும்போது, அதிலே கையாளப்பட்டிருக்கும் இலக்கியச் சொற்களையும், இழைந்தோடும் நயத்தையும் பார்க்கும்போது கலைஞர் அவர்கள் இனிமேல் கவிதையே எழுதலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

எம். ஆர். சுந்தரமூர்த்தி, தஞ்சை.

இந்த ஆண்டு வெளிவந்துள்ள எல்லா அண்ணா மலர்களிலும், கலைஞர் அவர்களது ஒரே கவிதைதான் காணப்பட்டது; காஞ்சியில் புதிய கவிதை இடம்பற்றி இருக்கிறது. 'காஞ்சி'யின் சிறப்பு – தனிச் சிறப்புதான்!

துரை. வேணுகோபாலன், மானம்பதி.

சமையலை ஆக்கித் தந்து, சுவைக்காமல் இமைமூடிய அண்ணனைப்பற்றிய வேழவேந்தன் அவர்களது கவிதையைப் படித்ததும், வாருங்கள் அண்ணா! வாருங்கள்! என்று என்னை அறியாமலேயே கதறிவிட்டேன்.

தம்பி-சண்முகவடிவேல், சேலம்.

ஆண்டு மலரில் வெளிவந்துள்ள 'மயக்கம்' சிறுகதையைப் படித்து மயங்கிவிட்டேன்! புதுச்சேரியையே படம் பிடித்துக் காட்டிவிட்டாரே புலவர் அரிமதி தென்னகன்!

நு. சுவாமிநாதன், கோரிமேடு,

கவிதைத் தொழிலைப் பற்றி, கவிஞர் வல்லம் வேங்கடபதி அவர்கள் மலரில் எழுதியிருக்கும் கட்டுரை மிகவும் பயனுடைய ஒன்று; கவிதைத் தொழிலில் இருப்போர்—பத்திரமாகப் பாதுகாத்து வைக்கவேண்டிய படைப்பு!

புலவர். வளவன், விருத்தாசலம்

பேரறிஞர் அண்ணா சில நினைவுகள்

1950 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்ற விரிவுரையாளனுக போய்ச் சேர்ந்தேன். அதற்கு முன்பு பேரறிஞர் அண்ணு அவர்களின் சொற்பொழிவை — இலக்கிய தொடர்பான சொற்பொழிவை — ஒரே ஒரு முறை என் சொந்த ஊராகிய திருச்சிராப்பள்ளி பிசப் ஈபர் கல்லூரிக் கூட்டத்தில் கேட்டிருக்கிறேன். அப் பேச்சுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நிதி திரட்டுவதற்காகப் பேசிய பேச்சு. அப் பேச்சில் என் நினைவில் நீங்காமல் நிற்கும் பகுதி "புரட்சிக் கவிஞரிடம் பொருள் சேர்ந்தால் அப்பொருளை அவர் எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்துவார் — எப்படி எப்படிப் பயன்படுத்த வேண்டும்—என்பது பற்றிய பகுதிதான். புரட்சிக் கவிஞருக்குக் கொடுக்கும் ஒவ்வொரு ரூபாயும் புதிய புதிய தமிழ்க் கவிதைகள் தோன்றுவதற்குப் பயன்படுமென்பதை விளக்க விரும்பிய பேரறிஞர் அவர்கள் தமக்கே உரிய சொல்லோவியத் தமிழில் இந்திய நாட்டின் — உலக நாடுகளின் — இயற்கைஅழகுகளையெல்லாம் எழிலோவியமாக ஆக்கிக் காட்டி அந்த எழிலோவியங்கள் எல்லாம் இன்பத் தமிழ் இலக்கிய ஓவியங்கள் ஆகுமென்று படம் பிடித்துக் காட்டினுர். கால் நூற்றுண்டுக்குமுன்பு பேரறிஞர் அவர்கள் பேசிய அந்தப் பேச்சை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் பேரறிஞர் அண்ணு அவர்கள் பிறவியிலேயே கவிஞராகப் பிறந்திருந்தால் தமிழ்க்கவிதை எவ்வளவு செழிப்பு அடைந்திருக்கும் என்று ஏங்க வேண்டியுள்ளது.

(2)

காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியில் கடமையாற்ற நேர்ந்த நிலையில் பேரறிஞர் அண்ணு அவர்களே அந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெருங்காரணராய்விளங்குகிருர் என்பதை அறிந்து அளவிலா மகிழ்வு அடைந்தேன். அக் கல்லூரிக்காக அவ்வூரில் வாழ்ந்த திரு. கந்தசாமி முதலியார் என்பவர் தந்த ஐம்பதாயிர ரூபாயை மூலதனமாகக் கொண்டே கல்லூரி தொடங்கியது என்றும் கல்லூரி வாடகைக் கட்டிடத்திலே ஆரம்பமாகியுள்ளதுஎன்பதையும்அதற்கு நிலையான கட்டிடம் ஏற்படுத்துவதற்குப் பேரறிஞர் அண்ணு அவர்கள் நாடகங்கள் நடத்தி நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும் அறிந்து பேருவகை கொண்டேன். அந்நிலையில் ஒருநாள் திருக்கச்சி நம்பித் தெரு வழியாகத் தனியே நடந்து கொண்டிருந்தேன். அதற்குமுன்பு பேரறிஞர் அண்ணு அவர்களை யான் நேரில் பார்த்துப் பேசியதில்லை-ஆசிரியன் என்ற முறையில். ஆயினும் அவர்கள் கல்லூரிக்கு யார் யார் வந்திருக்கிருர்கள் என்பதை எப்படியோ கேட்டுத் தெரிந்துக்கொண் டிருக்கிருர்கள். அதனுல் நான் நடந்து போவதைப் பார்த்துக் கொண்டு ஒரு விறகுக் கடையில் சிறு பலகைமேல் உட்கார்ந்திருந்த அவர்கள் கடையில் இருந்த ஒருவர் வாயிலாக என்னைக் கூப்பிடச் சொன்னுர்கள். நான் திரும்பிப் பார்த்து அறிஞர் அண்ணு அவர்கள் அழைக்கிருர்கள் என்பதை அறிந்து மிகுந்த அடக்கத்தோடும் ஆர்வத்தோடும் அவரிடம் சென்றேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து "நீங்கள்தானே நம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்?" என்று கேட்டார்கள். 'ஆமாம்!' என்றேன். 'கல்லூரி எப்படி இருக்கிறது'என்று கேட்டார்கள். நன்ருக 'நடக்கிறது' என்றேன். கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் அவர் முகத்தில் இருந்த மலர்ச்சி மறைந்தது. சினத்தின் சிவப்பைக் கண்டேன். துயரத்தின் கருமையையும் கண்டேன். அந்த நேரம் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்து அல்லாடிகள் சொல்லாடிக் கொண்டிருந்த நேரம். இந்திய அரசியல் அமைப்புக்கே இதன் காரணமாக முதல் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டிய நெருக்கடி நிறைந்திருந்த நேரம். எனவே, அது குறித்து நாடெங்கும் கிளர்ச்சிகள் கிளம்பிக்கொண்டிருந்தன. அதனுல் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த உணர்ச்சிகளோடு பேரறிஞர் அண்ணு அவர்கள் என்னிடம் சொன்னுர்கள்: "என்ன, மறுபடியும் தகுதி, திறமை என்பதன் பெயரால் சாதி, நீதி பேச ஆரம்பித்துள்ளார்கள். இவர்களுக்கு என்ன தகுதி, திறமை இருக்கிறது இன்னும் ஒரு அரிக்கன் விளக்கைச் சொந்தமாகக் கண்டு பிடிக்கத் தெரியவில்லை; எல்லாம் நகல் அறிவு: அசல் அறிவு இல்லை, இதற்குள் தகுதி, என்று சாதி, நீதி பேச ஆரம்பித்திருக்கிருர்கள். போனுல் போகிறது என்று கொஞ்ச காலமாக இதிகாசங்களிலும் புராணங்களிலும் இருக்கும் ஆபாசங்களை அம்பலப் படுத்தும் வேலையைத் தள்ளி வைத்திருந்தோம், இனிமேல் அதை முழு மூச்சுடன் ஆரம்பிக்க வேண்டியதுதான்" என்ருர்கள். நான் ஒன்றும் பேசாமல் நின்றேன். என்னிடம் இந்தச் சொற்களை அவர்கள் சொல்லிமுடித்ததும் ஏதோ ஒரு மந்திரத்தைச் சொல்லிக்கொடுத்த மாபெரும் குருவை போல் மௌனமாக இருந்தார்கள். நானும் வணங்கி விடைபெற்றேன்.

(3)

இந்நிகழ்ச்சிக்குப் பின் சில திங்களில் கல்லூரிக் கட்டட நிதிக்காகத் திறந்த வெளி அரங்கில் நாடகங்கள் நடைபெற்றன. அந்நாடகங்களுள் ஒன்ருகத்தான் அண்மை

டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,

யில் அமரராகிவிட்ட கே. ஆர், இராமசாமி அவர்கள் "ஓரிரவு" நாடகத்தை நானும் பார்த்தேன். இந்த நாடகத் தொடர் நிறைவு விழாவில் அப்பொழுது அமைச்சராக இருந்த திரு. பக்தவச்சலம் அவர்கள் வருகை புரிந்து தலைமை தலைமை தாங்கினார்கள். அந்நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியபேச்சு பெரும் பேச்சு. அதில் யான் இன்னும் மறக்காமல் இருக்கும் கருத்துகள் இரண்டு: (1) "இங்கே இந்த வாரம் முழுவதும் நீங்கள் பார்த்த திறந்த வெளி நாடகங்களைப் போன்ற நாடகங்களைத்தான் கிரேக்க நாட்டில் பொற்காலம் கண்டுகளித்தது" (2) அறங்களுள் எல்லாம் சிறந்த அறம் கல்வி அறம்; அந்த அறமும் சிறந்த அறம் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். இதை எங்கெங்கும் என்றென்றும் அவர்கள் குறிப்பிடவேண்டுமென்பதே என் அவா.

(4)

காஞ்சிப் பச்சையப்பர் கல்லூரியில் பத்து ஆண்டுக் காலமாக (50—60) தமிழ்த் துறைத் தலைவராகத் தொண்டாற்றினேன். ஒவ்வொரு ஆண்டிலும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சிக்கு அண்ணா அவர்கள் அங்கே தோன்றுவார்கள். சில நிகழ்ச்சிகளில் அழைப்பு இல்லாத நேரத்திலும் கூட உரிமையைப் பாராட்டி வந்து கலந்து கொள்வார்கள். அப்பொழுது எல்லாம் அவர்கள் பேசிய பேச்சுகள் யாவும் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் கிளர்ச்சியையும் வளர்ச்சியையும் தருவனவாகவே அமைந்தன. அவற்றுள் எல்லாம் மறக்க முடியாமல் நெஞ்சில் நின்று அவ்வப்பொழுது சுறுக்கென்று தைக்கும் ஒரு கருத்து உண்டு. அது இது; "உங்கள் கல்லூரி முதல்வர் — பேராசிரியர் சண்முகசுந்தரனார் அவர்கள் என்னை இந்தத் தமிழ் நாட்டின் முடிசூடா மன்னன் என்று திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்கள். ஆம். முடிசூடிக் கொள்வதிலே இருக்கக் கூடிய தொல்லைகளையும் துன்பங்களையும் அவர்கள் உணர்ந்தே முடிசூடா மன்னன் என்று என்னைக் குறிப்பிட்டார்கள்." இச்சொற்களை இப்பொழுது நினைந்தாலும் நெஞ்சம் நெகிழ்கிறது. தமிழ் நாட்டின் வேறு எந்த முதலமைச்சரைக் காட்டிலும் தனிப் புகழுடன் விடிவெள்ளிபோல் தோன்றி மறைந்துவிட்ட அந்த வித்தகருக்குத்தான் எவ்வளவு அதிகார வெறியற்ற அரசியல் உள்ளம்! நிர்வாகத்தின் கடமைகளையும் கொடுமைகளையும் உணர்ந்திருந்த நேரிய நெஞ்சம்!

(5)

காஞ்சிப் பச்சையப்பர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் ஏனோ அவரோடு நித்தமும் நெருங்கிப் பழகாமல் இருந்துவிட்டேன். என் இளமையின் தவறுகளில் அதுவும் ஒன்றோ என்று எண்ணி இப்பொழுது இரங்குகிறேன். ஆனால் அடிக்கடி நண்பர் —பேராசிரியர்—திரு. மா. கி. தசரதன் அவர்கள் அண்ணா அவர்களைப் பற்றிய செய்திகளை உருக்கத்தோடும் நெருக்கத்தோடும் என்னிடம் சொல்வார்கள். காரணம் திரு. தசரதன் அவர்களுக்கு என்னுடைய மாசு மறுவற்ற தமிழ்ப் பற்று தெரியும்; பேரறிஞர் அவர்களிடம் தனிப்பட்ட முறையில் யான் வைத்திருந்த பெருமதிப்பும் தெரியும். திரு. தசரதன் அவர்கள் என்னிடம் பேரறிஞர் அவர்களைப் பற்றிய செய்திகளைச் சொல்லும்பொழுது எல்லாம் அவர்களிடம் யான் செய்து கொண்ட ஒரே ஒரு வேண்டுகோள் —இப்பொழுதும் திரும்பத் திரும்ப நினைவுபடுத்தும் வேண்டுகோள்— பேரறிஞர் அவர்களைப் பற்றிய நினைவுரைகளை — ஆய்வுரைகளை— காலம் கடப்பதற்கு முன்பு கட்டுரைகளாக்கித் தர வேண்டுமென்பதுதான்.

(6)

1950-ஆம் ஆண்டில் திருக்கச்சி நம்பித் தெருவில் இப்பொழுது வருமான வரி அலுவலகமாக இருக்கும் கட்டிடத்தில் தான் கல்லூரி நடைபெற்றது. இக் கட்டிடத்திற்குச் சற்று எதிரில் இருந்தது தான் "திராவிட நாடு" அலுவலகம். அதனால் அடிக்கடி அறிஞர் அண்ணா அவர்களைக் காணும் பேறு எனக்குக் கிடைக்கும். எங்களைப் பார்த்து "காஞ்சிபுரத்திலும் கல்லூரி" என்று எண்ணி மகிழும் வாய்ப்பும் அவர்களுக்கும் இருந்திருக்கும். கல்லூரி சார்பாக அவர்களிடம் யார் எந்த உதவியை நாடிய நேரத்திலும் தாராளமாகச் செய்வார்கள்; கல்லூரி இளைஞர்களின் கையெழுத்துச் சுவடிகளுக்கெல்லாம் அணிந்துரை வழங்குவார்கள்; தனி அன்பு கொண்ட மாணவர்களோடு எல்லாம் சேர்ந்து படம் எடுத்துக் கொள்ள இசைவார்கள். பேரறிஞர் அவர்களிடம் அன்றாடம் பழகி மகிழ எனக்குக் கொடுத்துவைக்கவில்லை. ஆனால் அவர்களிடம் எனக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் ஏராளம், கல்லூரிக்கு முதன்முதல் அவர்கள் வருகை புரிந்தபொழுது 21 ஆண்டுகளுக்கு முன்பே—யான் அவர்கள் பற்றி அறிமுக உரை செய்தபோது கூறிய மதிப்பீடுகளுள் — கூரிய பகுதி— இதுதான்; "கடந்த கால் நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் எழுத்து உலகிலும்—தமிழர் எண்ண உலகிலும் படிப்படியாகத் தலைமை இடம் பெற்றுவரும் ஒரு பெருந் தமிழர் நம் பேரறிஞர் அண்ணா அவர்களே."

(7)

காஞ்சி கல்லூரியில் யான் கடமை ஆற்றிய நேரத்தில் இரு முறை பொதுத் தேர்தல் வந்தன. முதலாவது 52இல்; இரண்டாவது 57இல். முதல் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை. திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை ஆதரித்துக் கையொப்பம் இடுவோர்க்கு மட்டுமே ஆதரவாகப் பிரசாரம் செய்தது. இரண்டாவது முறை நடந்த 57ஆம் ஆண்டுத் தேர்தலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நேரடியாகவே—தாமே —தி.மு.க. வேட்பாளராக நின்றார்கள். இவ்விரு பொதுத் தேர்தல்களுக்கும் இடையே ஓரிரு முறை நகராட்சித் தேர்தல்களும் நடைபெற்றன. அப்பொழுதெல்லாம் பேரறிஞர் அவர்கள் பேசிய தேர்தல் பேச்சுக்களை விடாமல் கேட்பேன். அப்பேச்சுக்களில் அரசியல் தமிழ்—தமிழ் அரசியல் விளையாடியது என்றே சொல்லலாம். அவ்வளவு எளிமையாகவும் இனிமையாகவும் வலிமையாகவும் வளமாகவும் அவர் அரசியல் கருத்துக்களை வாரி வழங்கி வந்தார்கள்

அறிவிப்பு

வினா-விடைப் பகுதிக்கு வாசகர்களது வினாக்கள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகவும் தெளிவாகவும், பண்பாடுள்ளனவாகவுமிருக்கவேண்டும். அஞ்சலட்டையில் எழுதினாலே போதும்.

—ஆசிரியர்

என்பதை இப்போது நினைத்தாலும் உடல் புல்லரிக்கிறது. பெரும்பாலும் கூட்டங்களில் அவர் பேசத் தொடங்கும்போது இரவு 8½ மணி ஆகிவிடும். ஊர் எல்லாம் அடங்கி ஒடுங்கிய நிலையில் அவருடைய பேச்சுகளை ராஜரத்தினம் பிள்ளையின் நாதசுவரத்தைக் கேட்பது போல் நகர மக்கள் நகராமல் கேட்டு மகிழ்ந்தனர். பயன் அடைந்தனர்; பயன்பட்டனர். தமிழ் நாட்டு அரசியல் வரலாற்றில் 50க்கும் 60க்கும் இடைபட்ட காலம் ஓர் திருப்புமுனைக் காலம். இந்தத் திருப்புமுனையில் தமிழ் நாட்டின் அரசியல் பெருந்தேர் காஞ்சித் தலைநகரில் எவ்வாறு கால வீதியில் திரும்பிக் கொண்டிருந்ததென்பதை நேரில் கண்டுகளிக்கும் கண்களை எனக்கும் இறைவன் தந்தானே என்று எண்ணி யெண்ணி மகிழ்ந்தேன்; மகிழ்கிறேன். இறைவன் தேர் மூலை திரும்புவதைப் பார்ப்பது பெருஞ் சிறப்பு—பெரும் புண்ணியம் என்பார்கள். தமிழ் நாட்டில் அரசியல் தேர் திரும்பும் திருப்பத்தைக் காணும் சிறப்பும் பயனும் எளியேனுக்கும் கிடைத்ததே! அந்தத் தேரைத்தான் அந்தத் தலைவர் எவ்வளவு நளினமாகவும் நடுக்கமில்லாமலும் திருப்பினார்! அவர் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும்—ஆனால் தேர் ஆடாமலும் கோடாமலும் திருப்பி விட்டார்.

(8)

காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா நிகழ்த்திய தேர்தல் பேச்சுகளில் தெரிவித்த கருத்துகளுள் எல்லாம் என் நெஞ்சிலே பெரிதும் நிலைத்து நிற்பவை இரண்டே; (1) "ஆளும் கட்சிக்கு ஆற்றல் மிக்க எதிர் கட்சி தேவை. அது குதிரை வண்டிக்காரன் கையில் இருக்கும் கடிவாள வாரைப் போன்றது". (2) "எனக்கு மட்டும் ஆயுள் இருக்குமானால் இந்த நாட்டின் அரசியல் என் கைகளில் சிக்காமல் தப்பிவிடாது" இந்த இரண்டு கொள்கைகளையும் எண்ணி யெண்ணி உள்ளம் உருகுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் கையில் தமிழ்நாட்டின் அரசியல் சிக்கியது. அந்த அளவுக்கு அவருக்கு ஆயுளும் இருந்தது. ஆனால் அதனிடம் முழுதும் சிக்கிவிட அவரே விரும்பவில்லையோ? அல்லது அவர் அஞ்சியதுபோல் அவருக்கு ஆயுள்தான் இல்லையோ?

(9)

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வர் ஆனதும் ஒரேஒரு முறைதான் அவர்களை வீட்டில் பார்த்தேன்-அதுவும் அருமை நண்பர் ஒருவருக்கு ஆதரவு கேட்க. என்னைக் கண்டதும் முதல் அமைச்சர் ஆகி சில நாள்கள் ஆகி இருந்த நிலையில் அவர் "வாங்க; சஞ்சீவி: வாங்க: என்று பழமைப் பற்றுடனும் பரிவுடனும் அழைத்துத் தாம் அமர்ந்திருந்த சோபாவிலேயே அமர்த்தி அன்பு பாராட்டியதை நினையும்பொழுது கண்கள் நனைகின்றன.

(10)

பேரறிஞர் அவர்கள் பக்குவப்பட்ட-பக்குவப்படுத்திய-ஒரு சூழ்நிலையில் முதல்வர் ஆனார்கள். ஒரு வகையில் எதிர் பாராத நிலையிலேயே அப்பெருஞ்சிறப்பைப் பெற்றார்கள் என்றும் சொல்லலாம். ஆயினும் அதன் காரணமாக அணுகுண்டனைய அந்த மனிதருக்கு அணுவளவு செருக்கும் ஏற்படவில்லை. மாறாக அளவிறந்த அடக்கமும் எல்லையற்ற நல் அச்சமும்

(16-ஆம் பக்கம் பார்க்க)

வண்ணமிகு படைப்புகள், வர்ணமய உலகம்.
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம். பட்டுகள் பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும். குர்தாக்கள், பெல் பாட்டம்கள்,
லுங்கிகள், சேலைகள்! உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்!!

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்.

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ்,
எழும்பூர், :: சென்னை - 8.

வலிய கரங்கள் எங்களுக்கும் இருக்கின்றன!

மிஸ்டர் அப்போலோவின் அரசியல் பேட்டி!

அன்றைய செய்தித் தாள்களைப் புரட்டிக்கொண்டிருந்த மிஸ்டர் அப்போலோவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. நீண்ட காலத்துக்குப் பிறகு ஒரு வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்துக்கு வாய்ப்புத் தேடிக் கொடுத்த பாகிஸ்தான் அதிபர் யாகியானுக்கு, மனதுக்குள்ளேயே நன்றி சொல்லிக் கொண்டார்.

பிரதமர் இந்திரா காந்தி, தன்னுடன் யாராவது ஒரு செய்தியாளரை, தன்பயணத்துடன் அழைத்துச் சென்றிருக்கிறாரா என்பதைக் கண்டறிய எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த பிறகு, மனமுடைந்து போயிருந்த மிஸ்டர் அப்போலோ, தன்னை, தன்னுடன் வருகிறாயா என்று ஒருவார்த்தை கேட்கவில்லையே என்ற மனஉளைச்சலிலிருந்து விடுபடும் வாய்ப்பாக அன்றைய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு உயரே ஏறிப் பறக்கத் தொடங்கிவிட்டார்.

வான மண்டலத்தில், பம்பாயைத் தாண்டி பறந்து கொண்டிருக்கும் போது, அப்படியே ஒரு தாவுத்தாவி, யாகியாகானைச் சந்தித்து விட்டுப் போய்விடலாமே என்ற எண்ணம் எழுந்ததும், அடுத்தவினாடி லாகூரை நோக்கித் திரும்பினார் அப்போலோ.

இராணுவ உடுப்பைப் போட்டுக்கொண்டு, அந்த உடையில் இருந்த நூற்றுக்கணக்கானவர்களை நிறுத்திவைத்துக் கொண்டு ஏதோ குட்டிப்பிரசங்கம் ஒன்றுநிகழ்த்திக் கொண்டிருந்த யாகியாகான், சட்டென்று தனக்கருகாக மிஸ்டர் அப்போலோ வந்து குதித்ததும், நடுநடுங்கிவிட்டார்! ய..ரோஓஈ இந்திய ஒற்றன்தான் துணிவோடு தன் அருகே வந்து விட்டானோ என்ற கிலியால் :"ஷூட்; ஷூட்" என்று உத்திரவை உதிர்த்து விட்டார். அடுத்த வினாடி, அங்கே இருந்த படைத்தலைவர்கள் அனைவரும் தமது துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்து, குறிவைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அந்தக் காட்சியைக் கண்ட மிஸ்டர் அப்போலோ, நெஞ்சுயர்த்தி நின்று, மார்பகத்தில் இரு கைகளையும் சேர்த்துக்கட்டிக் கொண்டு, கம்பீரமாக நின்று "ஊம், சுட்டுக் கொல்லுங்கள்!" என்று கூறினார் அப்போலோ.

அந்தத் துணிவுகண்டு அயர்ந்த அதிபர்யாகியாகான், அப்போலோவின் அருகே சென்று நின்று, அவரை ஏற இறங்கப்பார்த்துவிட்டு, முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு, "தும் கோன்ஹோ" என்றார் மிடுக்கோடு.

ஏதடா இது! இந்தத் தொல்லை, இந்திராகாந்தியிடம் பேசும்போதுதான் என்று நினைத்தால், யாகியாகானும் பேசுகிறாரே எப்படி என்று எண்ணினார். உடனேயே, ஓகோ, இவர் பேசுவது உருது அல்லவா! இந்திக்கும் உருதுக்கும் அதிக வேற்றுமைகள் இல்லையே! என்று நினைவுக்கு வந்தது. அந்த நினைவைச் சிரிப்பாக்கிக் கொண்டு, தனது விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினார்.

வெடுக்கென்று பிடுங்கி அதனைப் படித்துப்பார்த்துவிட்டு "பிரஸ் ரிப்போட்டர்?" என்றார் யாகியாகான்.

"யெஸ்"—என்று பதிலளித்துவிட்டு "நான்எந்த அரசாங்கத்தின் சார்பிலும் தங்களைச் சந்திக்கவரவில்லை. அதனால் கேள்விகள் என் விருப்பப்படியேதான் இருக்கும்" என்று சொல்லிவிட்டு, யாகியாவை ஒரு நோட்டம்விட்டார்!

"வாட் யூ மேன்! நான் கிழக்கு வங்கத்து நாலரைக் கோடி மக்களையே நடுநடுங்க வைத்திருக்கிறேன்—நீ..." என்றார்.

"நோ நோ அதெல்லாம் உங்கள் இண்டர்னல் அப்பர்ஸ். அதைப் பற்றியெல்லாம் உங்ககிட்டே கேட்கப்போறதில்லை. சம் சிம்பிள் கொஸ்டின்ஸ்! ஆமாம், நீங்க ஊதாண்டுக்கு ஏதோ லெட்டர் எழுதி இருக்கிறதா பேப்பர்லே பார்த்தேன்..." என்றார்.

"ஓ, அதைப் பற்றிக் கேட்கிறியா? மிஸ்டர், உங்க இந்தியா இருக்கே, அதோட தொல்லை தாங்க முடியலே. அனாவசியமான பிரச்னையை யெல்லாம் எங்களுக்குக் கிளப்பி விட்டுக்கொண்டே இருக்கு. ஊதாண்ட்தான் அடிக்கடி அமைதி, அமைதின்னு சொல்லிக்கிட்டே இருக்காரே! அவருக்குக் கொஞ்சம் ரெஸ்பான்ஸ் கொடுக்கலாமேன்னு, ஒரு லெட்டர் போட்டிருக்கேன். அதிலே, நீங்க உடனே புறப்பட்டு வந்து, இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரு சுத்து சுத்திட்டுப் போங்கோ. அதனாலே யுத்த நெருக்கடி தணியலாம்னு எழுதி இருக்கேன்!" என்றார் பாக். அதிபர்.

"இவ்வளவுதான் எழுதி இருக்கீங்களா? இன்னும் ஏதாவது இருக்கா?"

"வழக்கமா நான் சொல்லுற எல்லாத்தைப் பத்தியும் தான் எழுதிஇருக்கேன். கிழக்குப் பாகிஸ்தானுக்கு, இந்தியா ஊடுருவல்காரவுங்களை அனுப்பித் தொல்லை கொடுக்குது; இதை உடனே தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கோனும்ன்னும் எழுதி இருக்கேன்; இந்தியாவும் பாகிஸ்தானும் உடனே எல்லாவகைப் படைகளையும், எல்லையிலிருந்து வாபஸ் வாங்கவேண்டும்னும் எழுதி இருக்கேன். அதோடு ஒரு யோசனையும் சொல்லி இருக்கேன்; உடனே இந்தியத் துணைக் கண்டத்துக்கு நீங்கள் விஜயம் செய்யப் போறதா ஒரு அறிவிப்புக் கொடுத்துட்டா, இப்போ இருக்கிற பதட்ட நிலை உடனே தணிஞ்சுப் போயிடும்"ன்னு எழுதி இருக்கேன்."

அப்போலோவுக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. ஊதாண்டுக்கு இந்த கேடு கெட்ட உலகம் எவ்வளவு மதிப்புக் கொடுத்துக்கிட்டு இருக்கு. ஐ. நா. சபையை எவ்வளவு தூரம் மதிக்குது? இந்த யாகியாகான்தான் எவ்வளவு

மதிப்பு வச்சி இருக்காரு ஐ. நா. கிட்டேயும், ஊதாண்ட் கிட்டேயும்—என்று தனக்குள் நினைத்துக் கொண்டு "நீங்கள் நினைப்பது போல, ஊதாண்ட் வர்ரதா வச்சுக்குவோம்; நீங்க படைங்களை வாபஸ் வாங்கிக்குவீங்களா?" என்று கேட்டார் அப்போலோ!

"அதெப்படி முடியும்! இந்தியா வாபஸ் வாங்கிக் கிட்டாத்தானே நானும் வாபஸ் வாங்கிக்க முடியும்?" என்றார் யாகியாகான்.

"முதல்லே, நீங்கதானே படைகளைக் கொண்டு வந்து குவிச்சிங்க?"

"யார்ரா இவன்! நான் எங்கே படைகளைக் கொண்டு வந்து நிறுத்தினேன்! எல்லாம் உங்க இந்தியா தான்—தெரிஞ்சுக்க!"

"சரி சரி...நீங்க ஒரு பாவமும் செய்யமாட்டீங்களே! அது போகட்டும்; இப்போ உலக நாடுங்க சில, கிழக்கு வங்காளத்திலே ஒரு அரசியல் தீர்வு ஏற்படணும்னும், இந்தியாவிலே இருக்கிற 90 இலட்சம் அகதிங்களும் உடனே பாகிஸ்தான் திரும்பிடணும்னும் சொல்லி இருக்குதுங்களே, இதைப் பற்றி நீங்க என்ன சொல்லுறீங்க?"

"இடியட்! அப்படி எதுவும் நடக்கக்கூடாதுங்கிறத்துக்காகத்தானே நான் இப்ப இந்த போர் நாடகத்தையே நடத்திக்கிட்டிருக்கேன். செத்துப்போனவங்களை யெல்லாம் சேர்த்தா, சுமார் ஒரு கோடிப் பேருங்களை வச்சி, யாராலே மாரடிக்க முடியும்! திரும்பி வந்தாக் கூட சுட்டுக் கொன்னுடமாட்டேனா?" என்று கூறிவிட்டு எதிரே இருந்த படைத் தலைவர்களைப் பார்த்தார். அவர்கள் இன்னமும், துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்து குறி பார்த்தபடி இருந்தார்கள்! "முட்டாளுங்களா! துப்பாக்கியைக் கீழே போடுங்க!" என்றார்! "அப்போ நான் மேலே போறேங்க! அகதிங்க, திரும்பக் கூடாதங்கிறத்துக்காகத்தான் இவ்வளவுமா? வர்ரேன்" என்று பதிலை எதிர்பாராமல் பறக்கத் தொடங்கினார்! "அட பாவி! அப்படியே பத்திரிகையிலே எழுதிடுவானோ!" என்று சொல்லிக் கொண்டு, வாயைப் பிளந்து மேலே பார்த்துக்கொண்டே நின்றார்.

அந்த இடத்தைத் தாண்டி, மிஸ்டர் அப்போலோ வங்கக் கடலின்மீது பறக்கத் தொடங்கினார். "சரி இலண்டனுக்குப் போகலாம்" என்று நினைத்தவுடனேயே, டௌனிங் தெருவில் வந்து நின்றார். இங்கே வந்து என்ன பிரயோசனம்? நாம் உடனடியாக ஜான்கிரிக்கை யல்லவா பார்க்கவேண்டும்! என்று நினைத்தார்! அதுதான் சரி, இவ்வளவு பெரிய நகரத்தில் அவரது வீட்டை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது; முதலில் 'சண்டே அப்சர்வர்' ஆபீசுக்குப் போகலாம் என்று நினைத்து, அந்த நாளேட்டு அலுவலகத்தின் செய்தி ஆசிரியர் அறைக்குள் வந்து நின்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

கைகுலுக்கி வரவேற்ற செய்தி ஆசிரியர் "நீங்கள் இப்போது ஜான்கிரிக்கைச் சந்திக்க, விரும்புகிறீர்கள் இல்லையா!" என்று கேட்டார்.

தன் இதயத்தை அந்த ஆசிரியர் எப்படிப் புரிந்துகெகண்டார்என்று வியந்த மிஸ்டர் அப்போலோ, "ஆமாம்! அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது!" என்று கேட்டார்.

இப்போதைய இந்தியச் சூழ்நிலையில், இந்திய நிலையைப் பற்றி அவர்தானே வெளிப்படையாகவும், துணிவாகவும் கட்டுரை எழுதி இருக்கிறார். எங்கள் நாட்டுப் பிரதமர்கூட இதுபோல் துணிவாகவும், தெளிவாகவும் கருத்துத் தெரிவிக்கவில்லையே!" என்றார் செய்தி ஆசிரியர்.

"மகிழ்ச்சி! எனக்கு அந்த பிரமுகரது முகவரி வேண்டும்! சந்திப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் அப்போலோ.

"தாராளமாக!" — என்று சொல்லி, ஏதோ ஒரு நம்பருக்கு போன் செய்து, ஏதோ பேசிவிட்டு, அப்போலோவின் பக்கம் திரும்பி, "நீங்கள் இப்போதே போகலாம்!" என்று சொல்லி, சில பைல்களைப் புரட்டி, அந்த எழுத்தாளரது முகவரியைத் தேடி, எழுதிக் கொடுத்தார்!

"நன்றி!" என்று பெற்றுக் கொண்ட அடுத்த வினாடியே மிஸ்டர் அப்போலோ, ஜான் கிரிக் என்ற பிரிட்டிஷ் எழுத்தாளரது மாளிகையில் வந்து நின்றார்!

வாயிலிலேயே அவரை வரவேற்ற ஜான் கிரிக் எனக்கு இந்தியர்களை ரொம்பவும் பிடிக்கும்! இந்தியாவின் பண்பாட்டில் நான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பவன்" —என்று சொல்லி அப்போலோவின் கரங்களைக் குலுக்கி உள்ளே அழைத்துப் போனார்.

சூடாகத் தேனீர் பருகிக் கொண்டே. அப்போலோ கேட்டார்; "இரண்டாவதாக நீங்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் போர் மூளக்கூடிய சூழ்நிலை இருப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம்! புறச் சூழ்நிலைகளை வைத்துக் கணித்துப் பார்க்கும் போது, எனக்கு அப்படித்தான் படுகிறது. ஆனால், என் கணிப்பின் படி போர் மூளுமானால், அதற்கான பழியை நான் உலக நாடுகளின் மீதுதான் போடுவேன். இப்போதும் நான் சொல்ல விரும்புவது அதுதான். உங்கள் பிரதம மந்திரி இந்திராகாந்தி உலகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார் இல்லையா? அவர், பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையே நல்லுறவுக்கும், சமாதானத்துக்கும் எத்தனையோ தடவைகள் முயற்சி செய்திருக்கிறார். எனவே, இப்போதைய அவரது பயணத்தை, சமாதானத்துக்காக அவர் மேற்கொண்டுள்ள கடைசீ முயற்சி என்றே கருதுகிறேன். இம்முயற்சியில் அவர் தோற்றுப் போனால், அது அவருடைய தோல்வி ஆகாது. உலகத்துக்கு நேரக்கூடிய தீங்கின் பழி, எந்தக் காரணத்தாலும் உங்கள் பிரதமரைச் சாராது. ஏனென்றால் அவர் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொண்டு விட்டார், உங்கள் பிரதமரை ஒரு சமாதானப் புறா என்றே நான் மதிக்கிறேன். ஆனால் கூர்மையான நகங்கள் படைத்த புறா. தனது முயற்சியில் தோல்வியுறுவாரானால், பாகிஸ்தானின் இராணுவ தர்பாரை எதிர்த்துப் போராடத் தயங்கமாட்டார்! இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், உலக வல்லரசு நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு கூட்டு முயற்சியை மேற்கொண்டால் தான் முடியும். தன்மீது ஏற்படப் போகும் களங்கத்தை உலக நாடுகள் துடைத்துக் கொள்ளப் போகின்றனவா—இல்லையா என்பது விரைவில் தெரிந்துவிடும்— எனவே அப்போது இந்த உலகத்தை நாம் பழிகார உலகம் என்று சொல்லப் போகிறோமா, வாழ்த்தப் போகிறோமா என்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!' என்று சொல்லி நிறுத்தினார் ஜான்

முளைக்குமா மோனநிலா !

தமிழ்மண்ணின் கனமெல்லாம் தன்னிலேற்றுத்
　　தனியான்மா தளையறுந்து போனதந்தோ !
இமிழ்கடலில் எழுஞாயிறு ஆழ்ந்ததிங்கே,
　　இனியுமொரு உதயகதிர் இருளைப்போக்க
முகிழ்த்திடுமா? மோனநிலா முளைக்குமோதான்?
　　மறுபடியும், மரங்களுக்கு வடிவம் உண்டோ?
மகத்தான மானுடத்தின் செல்வமிங்கே
　　மண்மூடிப் போனதய்யோ, மனத்துமேட்டில்!

அறிவுத்தேர் தடம்போட்ட ராஜபாட்டை
　　அவன்நெற்றி ; ஒளிபெற்ற ஞானவீதி!
செறிவான சிந்தனையின் தழும்புகள்தாம்
　　சீரான புருவங்கள் ! அன்புத்தாள்கள்
திறந்திட்ட வரவேற்பு வாசற்கூடம்,
　　தழுவுகிற விழியிரண்டும்; சங்கமங்கள்!
சிறிதான உருவந்தான்; குறளைப்போல!
　　சிரமெல்லாம் குனியவைக்கும் சிறிய'மூர்த்தி'!

இருளினிலே குமைந்திட்ட இளந்தமிழர்க்கு
　　இதயங்கள் திறக்கவந்த அன்புச்சாவி!
மருள்கின்ற மனமெல்லாம் மயக்கம்தீர,
　　மார்க்கங்கள் காட்டவந்த மந்திரக்கோல்!

அருள்கின்ற நெஞ்சாலே அனைவருக்கும்
　　அறிவுத்தீ கொளுத்தவந்த அன்னைதீபம்!
வருகின்ற தலைமுறையின் வடிவமெல்லாம்
　　வார்ப்பதற்கு வாய்த்திட்ட வார்த்தைச்சிற்பி!!

கிரிக் என்ற பிரிட்டிஷ் பிரமுகர்.

கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த மிஸ்டர் அப்போலோ, "உங்கள்பிரதரமது கருத்துக்கள் என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்றார். அவை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கருத்தாகிப் போகும். நான் எனது சொந்தக் கருத்துக்களைத்தான் கூறி இருக்கிறேன். பாகிஸ்தானைப் பிரித்தவர்களுடைய கருத்து எப்படி இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?' என்றார் கிரிக்.

எங்கள் நாட்டில் அறிஞர் அண்ணா என்றொருவர் இருந்து அண்மையில்தான் மறைந்துபோனார். அவர் ஒருநூலில், உங்கள் நாட்டவரது பண்பாடு பற்றி அழகிய உவமையொன்றால் விளக்கியிருந்தார். மயில்கழுத்து என்பது பலவண்ணங் கொண்டது. மயில் எந்தப்பக்கம் திரும்புகிறதோ, திரும்பும் திசைக்கு ஒவ்வொரு வகை வண்ணம் தெரியுமாம். ஆகவே, மயிலின்கழுத்து. இந்த வர்ணம்தான் என்றுகூறமுடியாது; அப்படிபட்டவர்கள் பிரட்டிஷ்காரர்கள் என்று எழுதியிருக்கிறார், என்றார் மிஸ்டா அப்போலோ!

"சரியான படப்பிடிப்புத்தான அது-இல்லையானால் இந்த வங்க தேசப் பிரச்சனையில் இப்படி பட்டும் படாமலும் இருக்குமா பிரிட்டன்?—என்றார் ஜான்கிரிக்.'

மகிழ்வுடன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் அப்போலோ! நேராக பெல்ஜியம் நாட்டிலுள்ள பிரசெல்ஸ் நகருக்கு வந்து, எக்மாண்ட் அரண்மனையில் வந்து நின்றார்.

பெல்ஜியம் பிரதமர் காஸ்டன் ஐஸ்கவுன்சைச் சந்தித்து வணக்கம் கூறி அறிமுகப்படுத்திக் கொண்டார். உடனேயே பிரதமர், "அடடா! நேற்றே வந்திருக்கக் கூடாதா? உங்கள் பிரதமரை சிறப்பாக வரவேற்று வழியனுப்பி வைத்தோம்!" என்றார்.

"நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது இந்தியா — வரவேற்புக் கொடுத்ததற்காக அல்ல; வரவேற்பு விருந்துக் கூட்டத்தில், நீங்கள், இந்தியாவின் உண்மை நிலையைப் பிரதிபலித்துக் காட்டி இருக்கிறீர்கள்! அதன் நிதானத் தன்மையையும் பாராட்டியிருக்கிறீர்கள். வங்காள தேசப் பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு அவசரத் தேவை என்பதையும் சுட்டிக் காட்டி இருக்கிறீர்கள்! இதற்காக எங்கள் நாட்டு மக்களது சார்பில் நன்றி கூறிக் கொள்கிறேன்" என்றார் அப்போலோ.

உண்மையை நாங்கள் ஆதரிக்கிறோம். அது மட்டுமல்ல; நாங்கள் பாகிஸ்தான் போக்கின்மீது உண்மையிலேயே அதிருப்தி அடைந்திருக்கிறோம். அதன் எதிரொலியாக பெல்ஜியம், பாகிஸ்தானுக்குச் செய்யும் பொருளாதார உதவியை நிறுத்தி வைத்திருக்கிறது. குறிப்பாக, அணு உலை நிறுவும் எங்கள் உதவியை நிறுத்திக் கொண்டிருக்கிறோம். நிலைமை சீர்பட்டால்தான் மேற்கொண்டு உதவ முடியும் என்பதையும் எடுத்துக் காட்டி இருக்கிறது" என்றார் பிரதமர்.

"அது உங்கள் நாட்டு விஷயம் என்பதால் நான் கருத்தறிவிக்கப் போவதில்லை. உங்களது கருத்தை நீங்கள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கும் எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்."

"தாராளமாக! இந்தியாவில் ஏராளமான அகதிகள் இருப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை சர்வ தேச சமூகத்தின் மூலம்தான் தீர்க்க முடியும் என்பதை நானும், என் மக்களும்கூட உணர்ந்திருக்கிறோம்! மக்களும், உங்கள் நாட்டுக்கு உதவ முன்வந்திருக்கிறார்கள்"

"மீண்டும், உங்கள் நாட்டு மக்களுக்கும், உங்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு, விடை பெறுகிறேன்"—என்று கூறிவிட்டு, அங்கிருந்து நியூயார்க் நகருக்கு வந்து, அந்த நகரத்தின் பெயரால் பிரசுரமாகிக் கொண்டிருக்கும் நாளேடான "நியூயார்க் டைம்ஸ்" என்ற செய்தி இதழின் அலுவலகம் புகுந்தார்.

செய்தி ஆசிரியரைச் சந்தித்து "உங்கள் இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், ஒரு விஷயம் பற்றி விவாதிக்க விரும்புகிறேன்" —என்று சொல்லிக்கொண்டே அமர்ந்தார்!

தாராளமாகப் பேசுங்கள்!" என்றுகூறிய அவர், எந்த விஷயத்தைப்பற்றி' "என்று வினக்குறியுடன் நிறுத்தினார்.

"யாகியாகானின் அரசாங்கத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் பிரசாரகர்கள், இந்தியாபற்றி என்ன கருதுகிறார்களோ, அதனையே அமெரிக்க நாட்டின் நிபுணர்களும் பிரதிபலிக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே, அதைப் பற்றித்தான்!" என்றார் அப்போலோ!

ஒகோ, அதுவா! மேற்குபாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானைப் பிரித்து, இந்தியப் பாதுகாப்பின் கீழ் அது சுதந்திரம் பெற்றிருக்க ரஷ்யாவும், இந்தியாவும் முயல்கின்றன'' என்பது அதிபர் அயூப்கான் கூறும் குற்றச் சாட்டாகும்! அதே குற்றச்சாட்டை இங்குள்ள நிபுணர்களும் அப்படி நம்பும்படிக் கூறுகிறார்கள். அதைத்தான் நாங்கள் செய்தியாக்கிப் போட்டிருக்கிறோம்! இந்த நிலை நீடித்தால், இந்திய — அமெரிக்க உறவில், அதன் விளைவு கடுமையானதாக இருக்கும் என்றும்கூட நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோமே!'' என்றார் ஆசிரியர்.

"அது உண்மைதான்! அந்த நிலைமை எப்படி ஏற்பட்டது? என்பதை நான் தெரிந்துகொள்ள முடியுமா?''

"அது அரசாங்கப் பிரச்னை! காரணம் ஒன்று இரண்டு என்று எடுத்துக் காட்டி, தப்பிவிட முடியாது!''

"அப்படியா! நான் நினைக்கிறேன் — சீன நாட்டின் வல்லரசுத் தன்மை உலகில் பரவப் பரவ, ரஷ்ய நாட்டின் செல்வாக்கு மங்கிவிடக்கூடும். அப்போது கிழக்காசியாவிலும், மத்திய ஐரோப்பாவிலும், செஞ்சீனா செல்வாக்குப் பெற்றுவிடக்கூடும். அது அவ்வாறு செல்வாக்குப் பெறுமல் தடுக்க வேண்டுமானால், செஞ்சீனவுடன், அமெரிக்கா நேசத்துடன் இருந்து, கழுத்தறுக்க வேண்டும்; பாகிஸ்தானின் மிக நெருங்கிய நட்பு நாடு சீனா. அதனால் சீனாவின் புன்சிரிப்புக்காக, அமெரிக்கா பாகிஸ்தானின் பக்கம் சாய்ந்திருக்கிறது'' என்று. நீங்கள் மறுக்கிறீர்களா?''

"நான் இதனைச் செய்தியாக்கிப் போடலாமா?''

"உடனே செய்யுங்கள்! நன்றியும் கூறுகிறேன்—ஆனால் எனக்குத் தெரியும்—நீங்கள் எனது கருத்தை வெளியிடமாட்டீர்கள் என்று!''

"உண்மைதான்! எங்கள் இதமுக்கு இந்திய நாட்டின்மீது அனுதாபம் உண்டு; அதே நேரத்தில் அமெரிக்காவின்மீது கடமையும் இருக்கிறது'' — என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் ஆசிரியர்.

"நல்லது. அதேபோல் எங்களுக்கும் கடமைகள் இருக்கின்றன. எங்கள் கரங்களும் வலியனவாகத்தான் இருக்கின்றன. நெஞ்சிலே உரமும், நேர்மைத் திறமும் மிகுதியும் உண்டு எங்களுக்கு! நீங்கள் உங்கள் நாட்டு மக்களுக்கு எந்தச் செய்தியை வேண்டுமானாலும் தாருங்கள்—நாங்கள் எப்பாடுபட்டேனும் உண்மைச் செய்திகளைத் தர முயல்வோம்! வருகிறேன்; நன்றி'' — என்று பறந்தார் சென்னையை நோக்கி! ஃ

—திருவாரூர் முத்துராமன்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைதான். குழந்தைக்காக ஆசைப்பட்டு குழந்தைத் தனமா[illegible] செயலில் ஈடுபட்டு விட்டே[illegible] மனிதன் குழந்தை இதயத்[illegible] இருக்கலாம், ஆனால் குழ[illegible]த் தனமான செயல்களில் ஈடுப[illegible] கூடாதுதான்...குழந்தைக்காக எதைவேண்டுமானாலும் இழக்கத் தவற மாட்டேன் என்றேனே... இப்போது எதை இழக்கக் கூடாது என்று இந்தச்சமூகம் சொல்லுமோ அதையே அல்லவா இழந்து விட்டு வந்திருக்கிறேன்... ஐயோ... ஒன்றின் மீது வைக்கப்படும் ஆசைகளின் அளவு, மற்றவற்றின் நிறை குறைகளை அறிந்து கொள்ள மறுப்பதின் வாய்ப்பு என்னவோ...? அவள் அழுது கொண்டே இருந்தாள் நெடுநேரமாக...

அவளுடைய ஏக்கம் குழந்தையைப் பற்றியதாகத்தான் இருந்தது; ஆனால் இன்னொன்றை இழந்து ஒன்றைப் பெற வேண்டிய இயற்கையின் சூழ்நிலை மீதே அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

என்ன செய்து என்ன?...... அவளுக்கு இன்னும் பத்து மாதங்களில், அவள் விரும்பித் தவித்த 'குழந்தை' ஒன்று பிறக்கப் போகிறதே? இப்போது பெருகிய அன்பு ஊற்று—ஆர்வ ஊற்று— அப்போதும் பெருகுமோ! ஃ

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரம்பற்ற பெருந்தன்மையுமே ஏற்பட்டது எனலாம். தமிழ் நாட்டின் அரசியல் வரலாற்றில் அவரைக் காட்டிலும் தமிழ் ஆற்றல் நிறைந்த முதல்வர் ஒருவர் இருந்ததில்லை. அவ்வளவு ஆற்றல் இருந்தும் அவ்வாற்றலினும் சிறந்த அடக்கமும் அச்சமும் பெருந்தகைமையும் நிறைந்த ஒருவரைத் தமிழகம் முதல்வராகக் கொண்டதும்-கண்டதும் இல்லை என்று தெளிந்து துணிந்து சொல்லலாம். இவ்வுண்மைக்கு ஒரு பெருஞ் சான்று அவர் அமரர் ஆகிய நிலையில் எல்லா வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் மறந்து உலகம் அவருக்குப் புகழ் வணக்கம் செலுத்தியதேயாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை அவருடைய தம்பியர் நம் நாட்டின் நல்லமைச்சர்கள் ஒவ்வொருவரும் தலைவர்-கலைஞர்-டாக்டர் தலைமையில் ஒருள்ளத்துடன் -'சீருள்ளத்துடன்-பேருள்ளத்துடன்-மள மள என்று முடித்து வருகின்றனர், எனக்குத் தெரிந்த வகையில்-வரையில் தி-மு-க- அரசின் வெற்றிகளுள் எல்லாம் அரியதும் பெரியதும் தமிழ் நாட்டுக் கோயில்களையெல்லாம் தமிழ்க் கோயில்களாக்கி வருவதே ஆகும். இந்தத் தமிழாக்க [illegible] பிரசார பலத்தால்-அறிவுக் கோயில்[illegible]யும் ஆட்கொண்டு விடுமே[illegible] தமிழகம் வையகத்தின் தலை[illegible]கமாகும். அந்நாளே பேர[illegible]ர் அண்ணா பிறந்தநாள்!

★

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற

பரங்கிப்பேட்டை

வைத்தியம்

சென்னையில்

நேரில் சிகிச்சை பெறலாம்.

ஆலோசனைக்கு :

ஹக்கிம்

M. M. முஸ்தபா, R.M.P.

சித்த ஆயுர்வேத யூனானி முறை ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில் அதிக அனுபவம் உள்ளவர்.

சகலவித சர்ம நோய், ஸ்கலிதம், ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி, பெண்களின் மாதவலி, வெள்ளை படுதல், நீரழிவு வாதம், ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும் பல நோய்களுக்கு கைதேர்ந்த சிகிச்சை பெறலாம்.

நோய் விபரம் எழுதி V.P.P. மூலம் மருந்து பெறலாம்.

முகம்மதியா வைத்தியசாலை

[டிரஸ்ட்]

130, பிராட்வே, சென்னை-1.

போன் : 23643

H.O. பரங்கிப்பேட்டை, தென் ஆற்காடு ஜில்லா.